

# கஞ்சமலை சித்தர்



ஆசிரியன்

சி அ. இரகுநாத



சித்தர் கோயிலும் மலையும்

## முத்தமிழ் நிலையம், சென்னை

விலை அணா 12.

(1947)

ஓம்

# கஞ்சமலைச் சித்தர்


ஆசிரியர் :

சி. அ. இரகுநாதன்

பாரதி நிலையம்

சின்னப்பம்பட்டி P. O. (சேலம் ஜில்லா)


பிரசுரம் செய்தவர் :

ஸ்ரீலஸ்ரீ-ஆண்ட சிவசுப்பிரமணிய பண்டித குருசுவாமிகள்

சான்றோர்குல ஜகத்குரு மடம் கருமாபுரம்.


முத்தமிழ் நிலையம்

75, வரதா முத்தியப்பன் தெரு, ஜி. டி. சென்னை



பதிப்புரிமை ஆசிரியர்க்குரியது.]


[அணு 12.

(1947)

First Edition February 1947

விலை அணா 12

Printed at the T. V. C. Press, Mint St, Madras.
Published by C. I. P. House Q. H. Ms 459—2000 C.

# முன்னுரை

தவப்பயனால் தெய்வத் திருக்குறளைப் பாடம் சொல்லக் காடை நகர் சென்றேன். கூவி யழைத்தவன் கந்தன். சில நாள் செல்லச்சிவமும் சேதுவும் சேர்ந்தனர். அங்கே, சித்தர்மலையைக் காட்டினர் எனக்கு. அன்று திருமூலரை நினைத்தேன். அவர் வழிவந்த கஞ்சமலைச் சித்தரைக் கண்டேன். வெண்பா ஒரு மலர்தான் கிடைத்தது. அம்மலரைச் சித்தர் சிரத்தில் இட்டு என் சிரத்தால் தாளை வணங்கினேன்.

அதுகண்ட பாலர் என்னைச் சித்தர் நூல் ஒன்று எழுதத் தூண்டினர். ஒருவாறு சித்தர் அருளை நினைந்து எழுதத் துணிந்தேன். திருமந்திரமும், கரபுரநாதர் புராணமும் ஆதாரமாகக் கொண்டு இவ்வுரை நடைநூல் எழுதி முடித்தேன். இடையிலே மனத்தெளிவில்லை. அறிவிற் சிறியன். உயர்திருவாளர்கள் புலவரேறு அ. வரத நஞ்சைய பிள்ளை, ப. வெ. பொன்னுசாமி நாயக்கர் இவ்விரு பெரியார்களிடத்திலும் படித்துக் காட்டிச் சிறப்புரையும் பெற்றேன்.

ஒருநாள் எனது நண்பர் திரு. ரா. பெருமாள் முதலியார் அவர்கள் "நந்திநூல்ஈஸ்வரநாடி" பாடம் செய்திருப்பது தெரிந்து எனது கோள்களைக் கூறினேன். பதினைந்து நாட்கள் செய்யுட்களைக் கூறினர். அந் நந்திநூலில் எனது கோள் நிலை முழுவதும் சித்தர் நூல் விளக்கமாக இருந்தது. உள்ளத்தைக் கண்டேன். உருகினேன். சித்தர் உள்ளத்தில் புகுந்தார். அக் கதைத் தொடர்பு கடைசியில் சேர்த்திருக்கின்றேன்.

கந்தன் காடை நகருக்கழைத்தான். சிவமும் விஷ்ணுவும் சித்தரைக் காட்டினர்கள். சித்தர், நான்தான்

வில்லும் வேலும்பிடித்த ராமனும் கந்தனும் எனக்கனவிலே காட்சியளித்தார். ஆடுகின்ற மயிலிலே வேலுடன் வந்து என்னை ஆட்கொண்ட சரவணபவன் வழி திறந்தார். நந்தி நூலில் அட்சரலட்சம் குவித்துக் காட்டினார். இன்னும் பல நூல்களுக்கு வித்து என விளக்கினார்.

தற்காலம் உள்ள கோணல்களை நீக்கி அன்பு வழியிலே வாழ்க்கையைச் செப்பனிட சித்தர் நூல்கள் துணை புரியும். அறிவு ஆற்றல்களில் சிறியனாகிய என்னை ஆட்டுவிப்பாரொருவர் ஆட்டுகின்ற துறையிலே இந்நூல் வெளி வருகிறது.

இதுவும் சித்தர் அருள். குற்றங் குறைகளைப் பொருட்படுத்தாது குணங்களைக் கைக்கொண்டு நூலை ஆதரிக்க வேண்டும் எனப்பணிவுடன் வேண்டுகிறேன்.

இந்நூலில் விளக்கமுறச் செய்யும் சித்திரப் படங்கள் புகைப்பட உருவங்கள் செய்து உதவிய சேலம் விவேகானந்த புகைப்படச் சாலை திருவாளர் இராதாகிருஷ்ண செட்டியார் அவர்களுக்கு சித்தர் அருள்புரிவாராக. இந்நூலை அச்சுவாகனத்தில் அமர்த்தி அழகுபெறச் செய்து கொடுத்த முத்தமிழ் நிலையம் திருவாளர் சக்கிரவர்த்தி நயினார் அவர்களுக்கும் வழிகாட்டி முன் நின்ற திரு. நாகபூஷண முதலியார் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

## பொருளடக்கம்

1. தோற்றுவாய்
2. மூர்த்தி
3. தலம்
4. தீர்த்தம்
5. கஞ்சமலைச் சித்தர்
6. பெயர்க்காரணம்
7. விருத்தன் குமரனானது
8. சாதல் நீக்கும் நெல்லிக்கனி
9. கஞ்சமலை
10. எல்லாச் சித்தும் கைவரப் பெற்றவர்
11. காலம்
12. மடங்கள்
13. கோயில் நிர்வாகம்
14. கோயில் ஊழியர்கள்
15. சிறப்பு நாட்கள்
16. சுற்றுவட்ட கிராமங்கள்
17. மற்றும் சில கதைகள்
18. புலிக்குத்திச்சாமி
19. சித்தர் நூல்கள்
20. முடிவுரை.

## திருமந்திரச் செய்யுள்

1. மந்திரம் பெற்ற
2. வந்தமடமேழும்
3. கலந்தருள் காலாங்கர்
4. நேர்ந்திடும் மூலசரியை
5. உயிர்க்குயிராய் நிற்றல்
6. நாடும் நகரமும்
7. பத்தர் சரிதை
8. சார்ந்த மெய்ஞ்ஞானத்தோர்
9. மந்திரங்கொண்டு

10. நந்தி அருளாலே
11. வித்தகமாகிய வேடத்தர்
12. பண்டிதராவார் பதினெட்டு
13. அந்தண்மை பூண்ட
14. மொழிந்தது மூவர்க்கும்
15. பின்னை நின்றென்னே.

## இந்நூலுக்கு ஆதாரமான புத்தகங்கள்

1. திருமந்திரம்
2. கரபுரநாதர் புராணம்
3. கொங்குமண்டல சதகம்
4. சிறுபாணாற்றுப்படை
5. புறநானூறு
6. வடமலை வெண்பா
7. ஔவை தனிப்பாடல்
8. கொங்குமண்டல கையெழுத்துப் பிரதி
9. காலாங்கர் ஞானம
10. திருமூலர் வரலாறு.

## கொங்குமண்டல சதகம்

1. மதிற்கரைக் கீட்டிசை
2. பஞ்சமுகத்தி லுதித்திடு
3. பற்றறுத்தாளும் பரமன்
4. உலையிலமுது படைத்துண்டு
5. சாதலை நீக்கு மருநெல்லி
6. திருமந்திர மின்னருளால்
7. விருந்து புறத்ததாத்தான்
8. ஆனைமலை குரு வெற்பு.

தோரமங்கலம் தமிழ்ப் பேராசிரியர்

**அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள்**

## சிறப்புரை

### பன்னிரு சீர் விருத்தம்

1. கொங்கிற் புலவர் பலரிருந்தார்
இருக்கின் ருரிப் போதுமெனக்
குறித்துக் காட்டற் கொருசான்ருய்
கொழிக்கும் சுவைத்தீந் தமிழுணர்ந்தோன்
இங்கிக் காலத் தடிமையின் வாழ்
வியலா துரிமை பெறல்வேண்டும்
என்னும் வேட்கை மிகுமுளத்தான்
இயலுங் கடமை மேற்கொண்டோன்
சங்கத் தமிழுங் கம்பனுரை
சான்ற விராம் சரித்திரமும்
சாற்றற்கரிய வன்புமிகத்
ததும்பி மொழிக்கு மொழிசெறிய
எங்கள் மனங்கள் சேட்டைவிட்டே
எதுகட் டளையென் றேவல்செய
இணக்கும் தொண்டர் புராணமெனும்
இதுவு முணரு மதியோனல்.

2. திருவள் ளுவர் நூல் கழகமெங்கும்
நிறுவிச் சிறூர்க்குச் செப்பிநந்தம்
தெய்வத் தமிழை மிகவளர்க்கும்
செம்மல் வேத வேதாந்தப்
பெருநன் னூற்கள் பலவெனினும்
பொருளொன் றேயாம் பெற்றிகண்டோன்
பேசுஞ் சமய விகற்பமொடு
சாதி விகற்பப் பிணக்கனைத்தும்
கருதும் உயர்ந்த நிலைகண்டால்
காணுச் சிறுமை யாமென்னும்
கருத்தா லென்னே டுணர்ச்சியொத்துக்
கலந்த வரிய உயிர்த்தோழன்

பரவும் புகழான் இரகுநாதன்
என்னு நாமம் படைத்தவன்பன்
பகர்ந்தான் கஞ்ச மலைச்சித்தர்
வரலா றென்னு முரைநூலே.

(வேறு) அறுசீர்

3. மூலர்மொழி மந்திரமே மூலமெனக்
கொண்டுபினும் முறையே நோக்கிச்
சாலவுரை கரபுரப் புராணமுடன்
சிலர்கருத்துந் தழுவக் கூட்டி,
நூலுணர் நுண் மதியாளர் கடாவுக்கு
விடைகாட்டி நொடித்துத் தூய
பாலொடுதேன் கலந்தனைய தமிழ்ச்சுவைஇன்
பங்கனியப் படிப்பீ ரம்மா.

சேந்தமங்கலம்

**ஸ்ரீ ஸ்வயம்பிரகாச ஸ்வாமிகள் சீடர் ஸ்ரீ ப்ரஹ்மானந்த ஸரஸ்வதி அவர்கள்**

## சிறப்புரை

**நேரிசை வெண்பா**

1. உலகமுய யோகம் உயர்வைத்யம் ஞானம்
பலவிலக்க ணந்தந்து பாலித்—தலகிலாச்
சீர்த்தி தமிழ்மக்கள் சேரச்செய் சித்தர்நூல்
பார்த்துத்தம் முள்ளம் பதித்து.

2. கஞ்சமலைச் சித்தர் கருணைத் தடம்பொய்கை
வஞ்சமின்றி மூழ்கி மகிழவே—செஞ்சொலால்
மாந்தர்க் குரைநூல் வகுத்த ரகுநாதன்
ஆந்துணையாக் கொள்க வறிந்து.

குறிப்பு :—மாந்தர்க்கு ரகுநாதன் வகுத்த உரைநூல் அறிந்து ஆந்துணையாக்கொள்க.



கோயில் முன் தோற்றம்



கோயில் இயற்கை தோற்றம்



குளக்கரை நந்தி



குளம்



வழி



சி. அ. இரகுநாதன்
நூல் ஆசிரியர்



ஸ்ரீலஸ்ரீ ஆண்ட சிவ சுப்ரமணிய பண்டித
குருசுவாமிகள். சான்றோர்குல
ஜகத்குரு மடம், கருமாபுரம்.
நூல் வெளிவரக் காரணமானவர்.

சேலம் செவ்வாய்ப் பேட்டை செந்தமிழ்ச் சங்க
நிரந்தரத் தலைவர் பாகல் பட்டி

## உயர்திரு, பா. வெ. பொன்னுசாமி நாயக்கர் அவர்கள்

## சிறப்புரை

"கஞ்சமலைச் சித்தர் வரலாறு" என்னும் உரை நடை நூலை எழுதிய திரு. சி. அ. இரகுநாதன் அவர்களால் படிக்கக் கேட்டேன். யான் எனது இளமையில் சித்தர் நெறியில் பலரொடு பழகிய நாட்கள் பல. அஃது பிற்காலத்தே அக ஒழுக்க உண்மை அறிந்து நிலைநாட்ட ஏற்றதாயிற்று. "கஞ்ச மலைச் சித்தரின் வரலாறு" என்னும் இந்நூலுக்குக் கரபுர நாதர் புராணமும் திரு மந்திரமும் ஆதாரமாக பல செய்யுட்கள் கூறப்பட்டுள்ளன. அதிகமான் நெல்லிக்கனி பெற்றது பல நூல்களிலும் விளக்கப்படுகிறது. அதிகமான் ஆண்ட தகடூர் அதற்கடுத்த கஞ்சமலை அதில் உள்ள கஞ்ச மலைச்சித்தர், அவர் மூலர் மரபினர், என்ற கூற்றுக்கள் அழுத்தமான மேற்கோள்களால் பொறுத்திக் காட்டப்படுகின்றன. இத்தகைய பயன்தரு நூல்கள் எளிய நடையில் புதிய கருத்தில் பல வெளிவர வேண்டுவது விரும்பத்தக்கது. இயற்றியவர் இத்துறையில் இன்னம் பல நூற்கள் காண ஏற்ற அறிவும் ஆயுளும் பெறுமாறு இறைவன் அருள் புரிவானக.

கோவை கோனியம்மன் வரலாறு, மருத மலை சரிதம்
முதலியவை எழுதிய

## திரு, சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்

## மதிப்புரை

"கஞ்சமலைச் சித்தர் வரலாறு" என்னும் பெயரிய இனிய நூலொன்றை எனது பார்வைக்கு அதன் ஆசிரியர் திரு, சி. அ. இரகுநாதன் என்பவரால் அன்பு கூர்ந்தனுப்பப் பெற்று முற்றும் படித்து மகிழ்ந்தேன். அன்பர்

அந் நூலை சித்தர் பெயர்க்காரணம், சித்தர் வல்லமை, தெய்வத் தன்மை, மலைவளம், மூர்த்தி, தலம், தீர்த்தம், யோகக்காட்சி, முதலிய பல பகுதிகளாகப் பகுத்துக் கொண்டு அவ்வத் தலைப்புகளுக்கு அமைந்திருக்க வேண்டிய சிறப்பியல்புகளை நுண்ணிதினுராய்ந்து அறிஞரும் ஆராய்ச்சியாளரும் ஒப்பும் முறையில் திறம்பட வரைந்திருக்கின்றனர்.

புதுவது புனைதற்குப் புதுத்துறையில் இறங்கிய நம தன்பர் தாம் இதுவரையில் கல்வித் துறையிலும் உலகானுபவத்திலும் அறிஞர்கள் அறிவு நூல்களுள்ளும் ஆராய்ச்சியிலும் ஆராய்ந்துணர்ந்த அனுபவ ஞானங்களை நுண்ணுணர்வால் நுணுக்கியறிந்து சீர்தூக்கிப் பயன்படக்கூடிய பகுதிகளை மட்டும் தமது வரலாற்றுள் ஆங்காங்கு இடம் பெறுமாறு நிரல்படக்கோத்து இனிய சுவையில் எழிலுறு நடையில் அழகுறு வகையில் அமைத்திருக்கும் அருமை பெருமைகள் அறிஞர்கள் பாராட்டக்கூடிய சிறப்புடையன.

கொங்கினைப் பிறப்பகமாக வுடையவர் நூலாசிரியரானதால் தமது நாட்டின் பழமை, பெருமை சரித்திரக் கூறு மலைக்காட்சி கஞ்சமலையின் அதிசயச் சிறப்பு அம் மலையில் அதிசயமாயுள்ள தெய்வ மூலிகைகள் ஒஷதி வர்க்கங்கள் பொன்னின் விளைவு பூநீர் உற்பத்தி, கடையெழு வள்ளல்களில் ஒருவனுன அதிகமானின் தகடூர் அவனது மலையின் அருநெல்லிக்கனி அது மனிதனது நரைதிரை மூப்பு நீக்கி நீண்ட நாள் உலகில் உயிர்வாழச் செய்யும் அற்புதம், ஆகியவற்றை பிற நாட்டினர் கண்டு வியக்குமாறு தமது நூலில் இடம்பெற வைத்திருக்கின்றனர். சன்னியாசிக்கும் சாதிப்பற்று விடாதென்பதைப் போல் அன்பருக்கு நாட்டுப்பற்று விடவில்லை போலும்.

இவை எல்லாம் கஞ்சமலைச் சித்தர் வரலாற்றில் உரிய விடங்களில் இடம் பெற்று மிளிருமாறு ஆசிரியர் கவனங் கொள்வார்கள் என்றே சிந்தித்தும் எதிர்பார்த்தும்

விரும்பியே அன்பரை இவ் வரலாற்றை வரைவதற்குத் தேர்ந்த கருமாபுரம் மடம் சான்றோர் குல ஜகத்குரு ஸ்ரீலஸ்ரீ ஆண்ட சிவசுப்ரமணியபண்டித குருசுவாமிகளது முன்னுணர்வைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.

ஆசிரியர் இத்துறையிலேயே எஞ்சிய சித்தர் வரலாறுகளையும் இம் முறையிலே வரைந்து உலகுக்கு உதவுவதற்கும் அவற்றை அன்பர்கள் ஏற்று ஆதரித்து மேலும் இத்துறையில் ஊக்குவதற்கும் அறிவையும் ஆற்றலையும் நீண்ட ஆயுளையும் திடகாத்திர ஆரோக்கியத்தையும் தந்தருளுமாறு புள்ளிமயிலிவர்ந்த வள்ளி மணாளன் பொன்னார் திருவடிகளை அனவரதமும் சிந்தித்துவந்தித்து வாழ்த்துகின்றேன்.

### வெண்பா

சத்தி திருவருளில் சாரமனம் தண்ணளியின்
முத்தி முதலாகும் மூலமது — பத்தியுடன்
சத்திசத்தி சத்தியென்று சாற்றிடுவோம் சந்ததமும்
பத்தி பரவும் பதம்.

### அறுசீர் விருத்தம்

நாரணன் நமசி வாயம் நலந்தரு ராம லிங்கம்
காரணன் காரி யத்தால் கந்தனைக் கருத்தில் காணத்
தாரக ராமன் தாளைத் தருந்தவம் புகழும் ஞானப்
பேரது பேசி நின்றேன் பித்தனாய்ப் பிதற்றி னேனால். 1

ஆரண மறையோன் ஆண்ட சிவசுப்ர மணிய அண்ணல்
காரண வழியாய்க் கஞ்ச கிரிதனைக் காட்டிக் கூவிச்
சீருடன் சித்தர் நூலைச் செப்பிடச் செய்தான் சித்தம்
நேருடன் நிற்க ஞானம் நிறைவுற மூல நாதன் 2

சித்தமும் சிவத்தை நாடிச் செப்பிய மேலோர் நூலின்
உத்தம நெறியை ஊட்டி உருகிட உள்ளம் உண்மை
தத்துவம் பெருக நீதி தழைத்திடத் தாள நாதம்.
முத்தமிழ் முறையே மோன முதல்வனும் முறையைமூட்ட

இருபத்து நான்கு எழில் இவ்வழி இசைத்தார் என்ற
பொருளது புகல ராம லிங்கத்தின் புதல்வன் போந்தான்
உருவது பெருமாள் நாமம் உரைதர நந்தி நூலில்
ஒருபரம் பொருளும் தாயும் உரைத்தனர் நாடி என்றான் 4

இத்தரை இன்ப மெல்லாம் இசைந்திடப் பேரின் பத்தின்
உத்தம நெறியை ஊட்டி உருக்கினன் உள்ளம் உண்மை
தத்துவம் தழைக்கத் தக்க தாளமும் தவமும் தந்து
சித்தராய் செய்ய கண்ணன் ஒடத்தில் சேர்ந்தான் அன்றே

ஒருவனை இரண்டில் காட்டி ஒமென மூன்றுங் கூட்டி
திருவருள் திறமும் நான்கில் தெளிந்திட ஐந்தும் ஒட்டி
அருள்தர ஆறுதாரம் அடக்கினன் எழில் அன்பு
பெருகிட எண்கு ணத்தான் பெருமையைப் போற்றி
போற்றி 6

புண்ணியம் பெருக நாளும் புதுநலந் தழைக்கப் பூவில்
நுண்ணிய நூல்கள் மேலோர் நுவன்றனர் நுட்ப மாக
எண்ணமும் உரையும் செய்கை எதுமவன் செயலென்
றெண்ணி
கண்ணனைக் காட்டி நல்ல கரையெனுங் கஞ்ச வெற்பில் 7

காரண குருவாய்க் கண்ணன் கருணையாய் பெருமாள்
பேரது உருவம் காட்டி பேசிய அருவம் சித்தர் [என்னும்
கூறிய உண்மை எங்கும் குணமது கூடிக் கஞ்சப்
பேறியல் பெருமாள் ஞானம் பெருகிட வாழ்க மாதோ 8

## துதிப்பு

சரியை கிரியை யோகமெனச்
சாற்றும் ஞானச் சாத்திரங்கள்
சால வுணரச் சமயமெனத்
தந்து சொல்லும் சன்மார்க்கம்
விரியும் தொகையும் விளங்கவுரை
விருப்பும் வெறுப்பும் இலதாக்கும்
மூலமுணரும் மேன்மை பெற
விளம்புந் திருமந் திரமதனை

திரிபு மயக்கம் ஐயமெலாம்
தீரத் தெளிக்கும் திருமூலர்
தெய்வ நலத்தில் கலந்தருளும்
தேவன் கஞ்ச மலைச்சித்தன்
பரிவும் பண்பும் படுபயனும்
பாரில் ஞானப் பயிர்த்தமிழில்
பகரும் சைவப் பான்மைதரும்
பைந்தண் கஞ்ச மலையிதுவே. 1

மலையில் ஈசன் மறைத்தபொருள்
மூல மதனை மாண்புடனே
காக்குங் கஞ்ச மலைச்சித்தன்
மனமும் வாக்கும் காயமுடன்
நிலையில் நின்று நிராமயமாய்
நேருஞ் சரியை கரபுரத்தில்
நினையும் முருகன் கணபதியோடு
ஒருவ னாக நிற்கவெனக்
கலையின் காற்றுக் கணக்கறியும்
மூல னோடுங் கலந்தருளும்
காளைப் பருவக் காலாங்கி
கஞ்ச மலையன் கமலமுனி
அலையும் கடலும் அகண்டமுமாய்
அறமும் பொருளும் இன்பமுமாய்
அன்பும் அருளும் அகம்புறமாய்
அமரும் கஞ்ச மலையிதுவே. 2

இதுவே பொருளென் றிவ்வுலகம்
இருளில் நீங்கி இசைபெருக
ஈட்டும் பொருளும் இன்பமுமாய்
இனிய தமிழில் இயல்இசையாய்
அதுவே எங்கும் அறிவொளியாய்
அன்பும் அருளும் அடக்கமுமாய்
ஆக்கும் அளிக்கும் அழிக்குமென
அறியும் வண்ணம் அவனியிலே

பொதுவில் புரியும் நடனமெனப்
போற்றி ஒழுகப் புலனடங்கிப்
பூத்த மலராய்ப் புண்ணியமாய்ப்
போந்து கொங்கின் நடுவணுறும்
மதுவேய் கஞ்ச மலையென்போம்
மலைய மானும், சுந்தரனும்
மன்னும் மூலச் சுந்தரனும்
மாயை நீங்கிக் களித்தனரால். 3

களித்த பொருளில் காலங்கிக்
கஞ்ச மலையன் கமலமுனி
கருதும் வண்ணம் காட்சியருள்
கண்டார்க் கில்லை கவலையுடன்
மலமும் மாசும் மரித்திடுமால்
மாயை நீங்கும் மனந்திருந்தி
மனையின் மாட்சி வளர்ந்திடுமா
மருந்து காட்டும் மாதேவன்
நலமும் திருவும் நாற்பொருளும்
நாட்டும், நந்தி நாதனென
நவிலும் மூலன் நாயகனால்
நயந்து கஞ்ச மலையமெனும்
தலமும் மூர்த்தி தீர்த்தமுமாய்
தவத்தில் நிற்போர் தண்ணளியாய்
தாயாய்த் தந்தை தனயரெனத்
தாங்கும் சித்தர் மலையிதுவே. 4

வினையை வெல்லும் வகையறியார்
மேலும் மேலும் வினைசெய்வார்
வீணும் வம்பும் வழக்குமென
விரும்பி வாழும் உலகினிலே
நினையும் வண்ணம் நிற்பதுமார்
நீதி நெறியில் நிறுத்துவதார்
நிறையும் நலனும் நாட்டுவதார்
நீநான் அவனென் றறிவதுமார்

மனையும் மாடுங் கன்றுமென
மயக்கி மதியை மறைப்பதுமார்
மருளை நீக்கி வளம்பெறவே
வந்து கஞ்ச மலையடியில்
உனையே துணையென் றுற்றறியும்
உள்ளம் வேண்டும் உறுதியுடன்
ஒன்றும் ஊக்கம் உதவியருள்
ஒளியில் வாழ உன்னுவமால் 5

விதியை வெல்லும் வகையறியா
வினையேன் உன்னை விரும்பிநிதம்
மோன நிலையை வேண்டுவனால்
வீணான் என்றே விடுத்தனையோ
கதியே தெனக்குக் கஞ்சமலைச்
சித்தா உன்னைக் கருதினனால்
காலம் நீளக் கடந்திடுதே
கருணை யிலையோ காலங்கி
மதியே மன்றில் நடம்புரிவார்
மதலாய் வாழ்க்கை வழிகாட்டி
மனதைம் புலனின் வழிப்போகா
வகையும் மாண்பும் வளரவுனைத்
துதியே புரியும் தூய்மைஉளம்
தோன்றச் சோதிச் சுகவொளியில்
துலங்கத் துணையுன் திருவடிகள்
தொழுது வாழத் துணைபுரியே. 6

சிவமே சிகரம் கஞ்சகிரி
சேர்ந்த சிறுவன் சரவணனாய்
சீராய் விளக்கம் நந்தியுடன்
செப்பக் குளமும் செம்பொருளாய்
நவமாய் நந்தி நாடியிலே
நாட்டி நாயேன் நலிவுதனை
ஓட்டி ஞான நலம்பெறவே
நவின்றாய் நீயும் நான்எனது

பவமே மாற்றப் பரம்பொருளாய்
பார்த்துப் பனுவல் பைந்தமிழில்
பதித்துத் துதிக்கப் பரிவுடனுன்
பாதம் போற்றிப் பாடுகின்றேன்
சிவமே சிறியேன் செய்த பிழை
தீர்த்துத் தெளியச் சித்தமதில்
செந்தா மரையாந் திருவடியை
சேர்ந்தேன் தெய்வ நலமருளே. 7

தெய்வத் தமிழில் திருமூலர்
செப்புந் திருமந் திரத்தினிலே
தேர்ந்து தெளியச் சித்தரெனச்
சேர்ந்த சிவமே திருமூலர்
செய்ய சீடர் கஞ்சமலைச்
சித்தர் கூடிச் சேர்ந்திருக்கச்
சென்றாய் நீயோ சிறுவடிவாய்
சிறிய நெல்லித் தீங்கனியாய்
உய்வார்க் குண்மை உறுதியென
உவக்கும் அமுதம் ஊட்டியவர்
உள்ளக் கண்கள் திறந்திடவே
ஊமை யாகக் கண்மூடி
மெய்ம்மை காட்டும் வேலவனே
விளங்கும் ஞான சரவணனே
வீரா சனத்தில் வீற்றிருக்கும்
மேலா தாரப் பெருமானே. 8

எட்டும் இரண்டும் அறியாத
ஏழை என்னை இழுத்துவிட்டாய்
என்ன செய்வேன் எதுவருமோ
இசையும் சைவ சித்தாந்தம்
தொட்டுத் தூய சுருதிநிலை
தோன்றித் துலங்கத் துணையிருப்பாய்
தொல்லை தீரச் சுகவெளியில்
துடித்த உள்ளம் துறவுநிலை

முட்டி மோனம் முதுகுவழி
மூட்டி மூலா தாரமதில்
முழுகி நிறுத்த வோட்டிவிட்டாய்
மூன்று குற்றம் முக்குணமும்
ஒட்டி ஒடுங்கி ஒன்றினிலே
உறுதியாக உனையறிந்தேன்
உயருங் கஞ்ச கிரியடியில்
உற்றேன் ஞான சரவணனே. 9

கண்ணனுகக் கருத்தினிலே
காட்டி நின்று ஓடமதில்
கரையைக் காட்டிக் கஞ்சமலை
கலக்கம் போக்கிக் கருணையுடன்
துண்ணொன் றேடத் துக்கமது
தொலையக் கூறிக் கன்னியினல்
தொல்லை மோகத் தொடரழியக்
குமரி தோன்றி குணம் பெருக
வண்ண மாக வடிவேலும்
மயிலும் தோன்ற வந்துநின்றுய்
வாக்குக் காயம் மனதினிலே
வருத்த மாய வினைகழித்தாய்
திண்ணமாகத் தெளிந்து மனம்
சிந்தித் திருக்க திருவடியை சேவித்
தென்றும் சரணமெனத் தேர்ந்து
புகழ வரமருளே. 10

## வெண்பா

கஞ்ச மலைச்சித்தர் காலங்கி நாதரவர்
நெஞ்ச மதில்நிற்க நின்மலமாய்—அஞ்சலென
தஞ்சம் அளித்திடுவர் தண்ணருளைத் தந்திடுவர்
கஞ்ச மலர்த்தாள் கதி. 1

கஞ்ச மலையில் கருணைக் கமலமுனி
தஞ்சம் அளிக்கும் தவம்பெருக—வஞ்சமிலா
நெஞ்சம் அடங்கி அருள்வெளியில் சூழ்ந்தவர்தாள்
நெஞ்சில் நினைப்போம் நிலை. 2

நிலையில் திரியாது நேர்மையுடன் ஞான
மலையில் மதியிருக்க மாண்பின்—கலையால்
உலையில் மெழுகாய் உருகிமனம் கஞ்ச
மலையை வழுத்தும் மனம். 3

மனத்தை இழுக்குமா மைந்துபுலன் தன்னை
மனத்தின் வசமாய் மருள்நீக்கி வாழும்
இனத்தில் இருத்தக் கமலமுனி கஞ்ச
வனத்தில் தருவான் வரம். 4

வரந்தர வேண்டும் வளர்தரு சித்தன்
நிரந்தரமாய் நின்மலமாய் நித்தியமாய் நின்று
பரந்துலகப் பற்றின்றி வாழப் பனுவல்
உரம்பெருகப் பாடும் உளம். 5

## எண்சீர்க்கழில்

சித்தாந்தச் செழுஞ்சுடராய்ச் சிவமயமாய்த்
திகழுமன நிலைபெறச்சன் மார்க்கநிலை தேடும்வண்ணம்
சித்தர்பதி னெண்மர்தரு நூலுணர்ந்து தெரிந்துபல
திறமையுடன் பற்பவகை செய்யும் செம்மல்
சத்துவநேர் சான்றோரின் குலகுருவா யாண்டசிவ
சுப்ரமண்யத் திருப்பெயரோன் தக்கோர் நாடும்
அத்துவித அறிவுதரு கஞ்சமலைச் சித்தர்வர
லாறுதனை அச்சியற்றி அருளினனால். 1

## உயர்திரு அருணகிரிநாதர் திருப்புகழ்

(1) பாலாய் நூலாய் தேனாய் நீளாய்
பாகாய் வாய்சொற் கொடியார்தம்

பாடா வாடா வேடா வாலே
பாடா சடற் றிடைபீறும்

தோலா லேகா லாலே யூனா
லேசூழ் பாசக் குடில்மாசு

தோயா மாயா வோயா நோயால்
சோர்வாய் மாளக் கடவேனோ

ஞாலா மேலா வேதா போதா
நாதா ரோதிக் கிரியோனே
ஞானா காரா வானாள் கோனே
நானா வேதப் பொருளோனே
வேலா பாலா சீலா காரா
வேளே வேடக் கொடிகோவே
வீரா தாரா ஆரா தாரா
வீரா வீரப் பெருமாளே.

(2) மூலா நிலமதின் மேலே மனதுறு
மோகா டவிசுடர் தனை நாடி
மோனா நிலைதனை நானா வகையிலும்
ஓதா நெறிமுறை முதல்கூறும்
லீலா விதமுன தாலே கதிபெற
நேமா ரகசிய உபதேசம்
நீடூ ழிதனிலை வாடா மணியொளி
நீதா பலமது தருவாயே
நூலா ருசியமு தாலே திருமறை
நாலா யதுசெப மணிமாலை
நாடா தவரிடர் கேடா அரிகரி
நாரா யணர்திரு மருகோனே
சூலா திபர்சிவ ஞானார் யமனுதை
காலார் தரவரு குருநாதா
தோதீ திகுதிகு தீதீ செகசெக
சோதீ நடமிடு பெருமாளே.

## கஞ்சமலை

இம்மலையில் சோதி விருக்ஷங்கள் இருப்பதால் இதற்குச் சோதிமலை என்று ஒரு பேர். தற்போதும் இரவில் மலைமீது சோதி தெரிவதாகப் பலர் கூறுகின்றனர். இஃது "பாதலே பங்கள் சீவன் பரகா யம்பாய் மருந்து

சோதி மாதருவும் ரோமத் தருவொடு சுணங்கத்தாரு" எனக் கரபுரநாதர் புராணத்தில் காணப்படும். திரு அருணகிரியார் திருப்புகழில் "சோதிக்கிரி யோனே" எனக் கூவி, "சோதீ, திகுதிகுநடமிடும் பெருமாளே" என்ருர். அருணகிரி என்னும் பெயருக்கு சோதிகிரியும்சோதீ யாகவும் தான் தெரியும் என்பதில் என்ன ஐயம்.

முதல் திருப்புகழிலே கூறியிருக்கும் "வேலா பாலா சீலாகார, வீரா தாரா ஆரா தாரா வீரா வீரப் பெருமாளே" என்று சொல்லிக்கொண்டு கஞ்சமலைச் சித்தர் மூலவரைப் பார்க்கவேண்டும். உண்மை விளங்கும். இவ்வடிகளில் விளக்கிக் கூறியுள்ளபடி ஆறு ஆதாரமும் கடந்து அழகிய குழந்தை வடிவுபெற்று வீராசனத்திலே மூலாதாரத்தில் சீலாதாரமாய் உட்கார்ந்திருக்கும் கஞ்சமலைச் சித்தரைக் கண்டுகளிப்போமாக எனக் கூறுகிறதல்லவா. ஆம் மூலத்தான உருவத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது இச் செய்யுள்.

அடுத்த திருப்புகழ் "மூலா நிலமதில் மோன நிலை தனை, நாலு வகையிலும், சரியை நிலை, ஓதாரகசிய உபதேசம்" எனச் சித்தரின் கரபுரநாதர் ஆலய சரியைநிலை, திருமூலரிடம் கிரியை நிலை, கஞ்சமலையிலே யோகநெறி, திருக்கோயிலிலே ஞானவாழ்வு என சோதீ நடமிடும் தன்மையைத் தெளிவுபடுத்துவதாம். இவை தவிர கரபுரியில் அமரும் பெருமாளே என கரபுரநாதரைக் குறித்து 13 திருப்புகழ்கள் பாடியிருக்கிருர்.

## சித்தர்கள்

"எனக்கு முன்னே சித்தர் பலரிருந் தாரப்பா
யானும் வந்தேன் ஒருசித்தனிந்த நாட்டில்
மனத்தினிலே நின்றிதனை எழுதுகின்ருள்
மனோன்மணி என் மாசக்தி வையத்தேவி"

எனக் கவிச்சக்கிரவர்த்தி பாரதியார் பாரதி அறுபத்தாறில் கூறுகிருர். இந்நாட்டிலே பல சித்தர்கள் இருந்த

னர். அக்கூட்டத்தில் யானும் ஒரு சித்தன் வந்தேன் என்கிறார். எப்படி எனக் கேட்டுக்கொண்டு பதிலளிக்கிறார். இதையான் எழுதவில்லை. பின்பு யார் எழுதுவது எனில் மனோன்மணி, என்மாசத்தி, வையத்தேவி, என் மனத்தினிலே நின்று இதை எழுதுகின்றாள், என விளக்குகிறார். எழுதுபவளை மூன்று பெயரால் சுட்டுகிறார். "மனோன்மணி" இதுவே மனதின்கண் உதிக்கும் அறிவொளி. அதாவது பசுந்தமிழில் குழந்தை யறிவு. இரண்டாவது "என்மாசத்தி" இதுதான் காளைப் பருவத்திலே கண்ட நான் என்னும் அகங்கார அறிவு. மூன்றாவது "வையத் தேவி." இதுவே பற்றின் நீங்கி உலகத்தோடு ஒன்றிய தான் அவனாகிய அறிவு. இதையே பழந்தமிழர் பாடியிருக்கின்றனர். திருமூலர் திருமந்திரத்தில் கூறுகிறார். "சித்தர் சிவஞானம் சென்றெய்து வோர்களே" என்றும், "சார்ந்த மெய்ஞ்ஞானத்தோர் தானவனாயினோர் சேர்ந்த வெண் யோகத்தர் சித்தர்" எனவும் விளக்கியிருக்கிறார். சித்தி என்பது அறிவு. சித்தர் பண்புபட்ட அறிவுடையோர். இத்தெளிந்த அறிவினாலே பல அற்புதங்கள் செய்யலாம். இதையே "சேர்ந்த வெண்யோகத்தர்" என்றார். எட்டுவகையோகம் எட்டுவகை சித்தி. இந்த எட்டுவகை யோகத்திலே நின்றாருக்கு கிட்டுவது எட்டுவகை சித்திகள். சித்திகள் கைவரப் பெற்றபின் இவையும் பயனற்றன என்று கண்டு "சார்ந்த மெய்ஞ்ஞானத்தோர் தானவனாயினோர்". தன்னாலாவ தொன்றுமில்லை என்று அறிவதும், அவனருளால் செய்கிறோம் என்ற திண்ணமனத்துடன் இடையறாது பயன் கருதாது உழைப்பவரே சித்தர். தமிழ் நாட்டிலே சித்தர்கள் எண்ணிறந்தவர்கள். அவர்களுள் பதினெண் சித்தர்கள் என்றும் நவநாதர்கள் என்றும் சித்தர் வரலாறுகள் கூறுகின்றன. இவர்கள் பாடிய பாடல்கள் பல. இவை எளிய நடையும் ஆழ்ந்த பொருளும் உள்ளன. சித்தர்கள் பொருள்களின் பகுதி நுட்பமறிந்து, தேகத்தின் பகுதிக் கொப்ப ஆளுந்திறமையுள்ளவர்கள். தாவர நூல், இரசாயன நூல், வைத்திய நூல் முதலிய பல பழந்தமிழ்ச் சித்தர்கள் செய்தவையேயாம்.

தற்காலம் நூல்களில் தெரிந்தவரை சித்தர் கூட்டத்து முதல்வர் நந்தியம்பெருமான். இவர் சிவபெருமானுக்கு வாகனமாகவும் வாயிற்காப்போராகவு மிருப்பவர். இவரிடமிருந்துதான் சிவனருள் பெறல் வேண்டும். இஃது திருமூலர் திருமந்திரத்தில் காணப்படும். அஃது கீழ் வருமாறு.

"நந்தியருள் பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்றுதொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோடு மெண்மருமாமே"

நந்திதேவர் அருள் பெற்றவர்கள் சனகர், சனாதனர், சனந்தனர், சனத்குமாரர், சிவமுனி, பதஞ்சலி, வியாக்ரமர் என்ற எழுவரும் திருமூலரோடு எண்மர் என்பர்.

"மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துரு காலாங்கி கஞ்சமலைய னோடு
இந்த எழுவரும் என் வழியாமே"

திருமூலரிடத்திலிருந்து மந்திரம் பெற்றவர்கள், மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன் கந்துரு காலங்கி கஞ்சமலையன் என்ற எழுவர்.

"கலந்தருள் காலாங்கர் தம்பால் அகோரர்
நலந்தரு மாளிகைத் தேவர் நாதாந்தர்
பலங்கொள் பரமானந்தர் போகதேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத்தோரே"

என்ற செய்யுளால் கஞ்சமலைச் சித்தரிடத்தே மாணாக்கரானவர்கள் அகோரர், மாளிகைத்தேவர், நாதாந்தர், பரமானந்தர், போகதேவர் என்ற ஐவர் என்பது தெளிவு.

எனவே இச்சிறு நூல் திருமூலர் தம் மாணாக்கராய்க் கலந்தருளிய, கஞ்சமலைச் சித்தர் தம் சரிதத்தை கூறுவதாம்.

# கஞ்சமலைச் சித்தர் சரிதம்

## வெண்பா

மூலன் வழிமுறையின் மோன முதல்வரெனுங்
காலங்கிக் கஞ்ச மலைச்சித்தர்—கோலங்கொள்
நாலந்த வேதத்தின் நாதாந்த நற்பதத்தே
சீலமுடன் சேர்த்தேன் சிரம்.

1. தோற்றுவாய் :— சித்தர் கோயில்.

"கொங்கு மலிந்தால் எங்கும் மலியும்" என்பது பண்டைக்காலப் பழமொழி. இதனாலேயே பண்டைக் காலத்தில் கொங்கு மண்டலம் சீரும் சிறப்பும் பெற்றிருந் தது விளங்கும். இக்கொங்கில் சித்தர் சமயக் குருக்கள் முடியுடை வேந்தர் குறுநிலமன்னர் புலவர் வள்ளல் எல்லோரும் மலிந்து கிடந்தனர்.

"மதிற்கரை கீட்டிசை தெற்குப்பழனி மதிகுடக்குக்
கதித்துள வெள்ளிமலை பெரும்பாலை கவின்வடக்கு
விதித்துள நான்கெல் லைசூழ வளமுற்று மேவிவிண்ணோர்
மதித்திட வாழ்வு தழைத்திடு நீள்கொங்கு மண்டலமே."

—கொங்கு மண்டல சதகம்

கிழக்குக் கோட்டைக் கரை. மேற்கு வெள்ளியங் கிரி. வடக்குப் பெரும்பாலை. தெற்குப் பழனிமலை. இதன் மத்தியில் உள்ளது கொங்குமண்டலம். இஃது பழைய எல்லை. தற்போது சேலம் கோயம்புத்தூர் இரண்டு ஜில் லாக்களும் சேர்ந்தது கொங்கு நாடு. சேலம் ஜில்லாவில் சேலம் தாலூக்கா திருச்சங்கோடு தாலூக்கா எல்லையில் உள்ளது கஞ்சமலை. வேம்படிதாளம் இரயிலடியிலிருந்து 5 மைல். சேலத்திலிருந்து எட்டுமைல் தூரம். இரயிலில் சேலம் ஜங்க்ஷனிலிருந்து ஈரோடு போகும்போது வீர பாண்டி ரோடு இரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில் மலையின் காட்சியைக் காணலாம். மலை கிழக்கு

மேற்கில் நீண்டதொரு தொடர். மேற்குக் கோடியில் வடபுறம் சித்தர் கோயில் இருக்கிறது. இக்கோயில் இருக்கும் இடத்திலிருந்து கிழக்கே ஆறுமைல் தூரம் மலை தொடர்ந்து செல்லுகிறது. இம் மலையில் அருமையான பல மூலிகைகள் இருக்கின்றன. மூலிகைகளைத் தேடி இமயமலையிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பல தவசிகள் வருகின்றனர்.

## கலித்துறை

“பஞ்சமுகத்தி லுதித்திடு மாகம பாகமெலாம்
செஞ்சொற் றிருமந்திர முரைமூலர் திருமரபிற்
கஞ்சமலைச் சித்தர் வாழ்வுமிரதங் கரணிவளர்
மஞ்சுதிகழ் கஞ்சமா மலையுங் கொங்குமண்டலமே.”
—கொங்கு மண்டல சதகம்

திருமந்திரம் என்ற ஆகம சாஸ்திரத்தை உரைத்தருளிய திருமூல நாயனார் பரம்பரையில் வந்த கஞ்சமலைச் சித்தர் வாழ்வதும் ரசம் முக்கரணிகள் வளர்வதுமான கஞ்சமலையுங் கொங்குமண்டலம்.

குறிப்பு:—“இக்கஞ்சமலையானது பூந்துறை நாட்டின் இணை நாடுகளில் ஒன்றான பருத்திப்பள்ளி நாட்டுக்கும் இராசீபுரம் நாட்டிணையான சேலம் நாட்டுக்கும் பூவாணிய நாட்டுக்கும் சேர்ந்ததாக இருக்கிறது. இவ்விடத்தில் ஆண்டுதோறும் மாசி மாதத்தில் வழலை (பூநீர்) விளைவதைப் பெறுவதற்காகப் பல திசைகளிலிருந்தும் வாதிகள் வருகிறார்கள். இம்மலை வாரிகளில் ஒன்றான பொன்னியில் தங்கச்சன்னம் அரித்து எடுக்கிறார்கள்.” இக்குறிப்பு கொங்குமண்டல சதகத்தில் காணப்படுகிறது. இச் செய்யுளில் குறித்த கஞ்சமலைச் சித்தர் வாழ்வதும் இரசமும் கரணிகள் என்ற மூலிகைகளும் இருப்பதும் இக் கஞ்சமலையே யாம்.

2. மூர்த்தி :—

திருநாமம் கஞ்சமலைச் சித்தேஸ்வரர். கோயில் கிழக்குப் பார்த்தது. மூலவர் வீராசனத்தில் உட்கார்ந்

திருக்கும் ஒரு யோகியின் உருவம். மூலஸ்தானம் "நவமி குசாணுலே" "நற்குகை நால் வட்டம் பஞ்சாங்க பாதமாய்" என்னும் திருமந்திரச் செய்யுட்களின்படி மேலே வட்டமாக அமைந்த கோபுரத்தோடு கூடியது. முன் அர்த்த மண்டபம் பின்னர் மகா மண்டபம். அதன் முன் பதினாறு கால்கள் தாங்கும் திறந்த வெளி மண்டபம். இம்மண்டபத்தில் வடபுறம் நவக்கிரகங்கள், செவ்வாய்ப்பேட்டை திரு, பொன்னுச்சாமி செட்டியாரால் அமைக்கப்பட்டவை.

## 3. தலம் :—

கஞ்சமலை அடிவாரத்தில் கோயில். கோயிலுக்கு அருகாமையில் ஊர் எதுவும் இல்லை. ஒரு மைல் தூரத்தில் ஏழுமாத்தானூர். அதற்கடுத்தது இளம்பிள்ளை. சித்தர்கள் செய்த தங்கத்தை மாத்துரைத்து ஏழுமாத்து ஆன ஊர். சுந்தரன் கறுத்த சோற்றை உண்டு இளம்பிள்ளையாக வந்த ஊர். கோயிலுக்கு நேர் மேற்கே காடையாம் பேட்டை. இவ்வூர் கஞ்சமலைக் காடையாம்பேட்டை என வழங்குகிறது. இவ்வூரில் ஒரு பெரிய சிவன் கோயிலும், ஒரு பெரிய பெருமாள் கோயிலும் இருந்தன. சிவன் கோயில் இருந்த இடமும் தெரியவில்லை. விஷ்ணுகோயில் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. இவ்வூரிலே சைவசித்தாந்த மடம் ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. இவ்வூரைச் சுற்றியுள்ள காடுகள் சிறந்த மண்ணுள்ளவை. குச்சிக்கிழங்குப் பயிர் அதிகம். அயம் கலந்த காடுகளையுடையது என்பது பெயர்ப் பொருத்தம். கஞ்சமலைச் சித்தர் கோயிலுக் கருகில் பொன்னகர் எனப் பெயர் வைத்து உண்டாகிய ஊர் இருக்கிறது.

## 4. தீர்த்தம் :—

கோயிலுக்குத் தென்புறம் கிழக்கிலிருந்து மேற்காக ஓடும் சிற்றோடை பொன்னி எனப் பெயருடையது. இம் மலையிலிருந்து பல சிறிய அருவிகள் மழை காலத்தில் வருகின்றன. இப் பொன்னியில் கொஞ்ச தூரம் தண்

ணீர் வற்ருது ஓடுகிறது. கோயிலுக்குத் தென்மேற்கே ஒரு குளம். இது ஸ்காந்த தீர்த்தம் எனப் பெயர் பெறும். இதில் பெரு வியாதியஸ்தர்கள் தவிர மற்றெல் லோரும் இறங்கிக் குளிக்கலாம். பல வியாதிகள் நீங்கு கின்றன. நீர் கெடுவதில்லை. நீர்ப்போக்கு வழி ஒடைப் புறம் உண்டு. பொன்னி நதியில் தங்கச் சன்னம் அரித் தெடுக்கிருர்கள். உழைப்பிற்குத் தக்க கூலி கிடைக் கிறது. இஃது கீழ்க் குறித்த பாட்டால் தெரிகிறது.

## கனக சபையாக்கப் பொன் கொடுத்தது

“பற்றறுத் தாளும் பரமனு னந்தம் பயினடஞ்செய்
சிற்றம் பலத்தைப் பொன்னம் பலமாகச் செயச்
செலும் பொன்
முற்றிலுந் தன்னகத் தேவிளை வாவதை மொய்ம்பிறையுள்
மற்றும் புகழக் கொடுத்த தன்றே கொங்கு மண்டலமே.

—கொங்கு மண்டல சதகம்.

பரமசிவமானவர் ஆனந்தத் தாண்டவம் புரிந் தருளும் சிதம்பரத்தைக் கனக சபையாகச் செய்யவேண் டிய தங்கம் அவ்வளவையும் தன்னிடத்து விளைந்த பொன்னையே கொடுத்து அரசனும் வியக்கப் புகழடைந் தது கொங்கு மண்டலம்.

குறிப்பு :—கீழ்க் கரைப் பூந்துறை நாட்டின் இணை நாடு பருத்திப்பள்ளி நாடு ஆம். அந்நாட்டில் உள்ள கஞ்ச மலையில் ஒரு சிறு வாரி உற்பத்தியாகி வருகிறது. அது மகுடஞ் சாவடி ரயில்வே ஸ்டேஷன் ஓரமாக தெற்கு நோக்கிச் செல்லுகிறது. அதனைப் பொன்னி ஆறு என்பர். அதிலுள்ள மணலைக் கரைத்துப் பொன் சன்னம் எடுக்கிருர்கள். உழைப்புக்குத் தக்க கூலிபோல் கிடைக்கிறதாம். எட்டரை மாற்று உண்டு. இதுபோல் கொங்கு மண்டலத்தில் பொன் கனி உள்ள இடங்கள் இருக்கின்றன. ஆதலால் ஆதித்தன் என்னும் அரசன்

கனக சபையாக்கப் பிரயத்தனப்பட்ட சமயத்தில் கொங்கு நாட்டில் விளைந்த தங்கத்தாலேயே பொன் ஓடு பாவினன்.

—கொங்கு மண்டல சதகம்.

5. கஞ்சமலைச் சித்தர் :—

"திருநந்தி யின்னருளால் எட்டுச் சித்தியும் சேர்ந்திறை
தருதந்திரம் தமிழ் மந்திரமாலை யில்தந்தவர் கால் [வன்
வருகஞ்ச மந்திரர் வாழ்கஞ்ச வெற்பு மருவிடுமான்
மருகன்சுதன் புரைவோர் வாழ்ந்திடுங் கொங்கு
[மண்டலமே."

—கொங்கு மண்டல சதகம் கையெழுத்துப் பிரதி ஒன்றில் காணப்படுவது.

இறைவன் அருளாலே உபதேசம் பெற்ற ஆகம சாத்திர நூலை தமிழில் திருமந்திரமாலை என்னும் பெயரிலே தந்தவராகிய திருமூல நாயனர் மரபிலே திருநந்தியம் பெருமானால் அட்டமா சித்திகளும் உணர்ந்து வாழும் கஞ்ச மந்திரர் என்னும் கஞ்சமலைச் சித்தர் வாழும் கஞ்ச மலையும் முருகன் அடியார்கள் வாழ்வதும் கொங்கு மண்டலம். இச்செய்யுளால் கஞ்சமலைச் சித்தர் அட்டமா சித்திகளும் உணர்ந்தவர் என்பதும் திருமூலர் மரபில் வந்தவர் என்பதும் விளங்குகிறது. கஞ்ச மலையை இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்தவர் என்பதும் தெரிகிறது. இதைத் திருமூலர் எழுதிய திருமந்திரத்தில் பார்ப்போம். இவர் திருமூல நாயனருடைய மாணக்கர். திருமூலரின் மாணக்கர் எழுவர். இஃது

"மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோடு
இந்த எழுவரும் என்வழி யாமே."

என்னும் திருமந்திரச் செய்யுளால் அறியலாம். இச் செய்யுளில் காலாங்கி கஞ்ச மலையன் என்பது கஞ்ச

மலைச் சித்தர் பெயர். மாலாங்கன் இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன் கந்துரு காலாங்கிக் கஞ்சமலையன் என்னும் இந்த எழுவரும் என் வழி ஆகும் என்பதால் காலாங்கிக் கஞ்சமலையன் என்பது கஞ்சமலைச் சித்தர் ஒருவரையே குறிக்கும். காலாங்கி என்பதைக் கந்துரு என்ற சொல்லோடு சேர்க்கலாகாதோ எனில் பின்னல் "ஆய்ந்திடுங் காலாங்கி கஞ்ச மலையான்" என்றும், "ஓர்ந் திடுங் கந்துரு கேண்மின்கள்" என்றும் கூறுவதால் காலாங்கி கஞ்ச மலையான் என்பது ஒரு பெயர் என விளங்கும். இனி திருமூல நாயனர் ஏழு பெரிய மடங் களை வகுத்தார், அம்மடங்களில் தம் மாணுக்கர் எழுவரும் சன்மார்க்க நிலையை உலகினர்க்குப் போதித்து வரச் செய்தார். இஃது

"வந்த மடமேழும் மன்னும்சன் மார்க்கத்தின்
முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை,
தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்
சுந்தரன் ஆகமச் சொன் மொழிந்தானே."

என்னும் திருமந்திரச் செய்யுளால் விளங்குகிறது. இதன் படி திருமூல நாயனரால் காணப்பட்ட சன்மார்க்க மடங் கள் ஏழில் கஞ்சமலைச் சித்தர் தம் மாணுக்கருடன் இருந்த மடம் இது என அறியலாம். இவரது மாணுக் கர்களைப்பற்றித் திருமந்திரத்தில் கூறப்படும் செய்யுள் ஒன்று வருமாறு.

"கலந்தருள் காலாங்கர் தம்பால் அகோரர்
நலந்தரு மாளிகைத் தேவர் நாதாந்தர்
பலங்கொள் பரமானந்தர் போக தேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத் தோரே."

என்று சிறப்புப் பாயிரத்துள் கூறியிருப்பது காண்க. அகோரர், மாளிகைத் தேவர், நாதாந்தர், பரமானந்தர், போகதேவர், என்ற ஐவரும் கஞ்சமலைச் சித்தரின் மாணுக்கர்கள் என்பது அறியலாம். இச்செய்யுள் "கலந் தருள் காலாங்கர்" எனத் தொடங்கி "நிலந்திகழ் மூலர்

நிராமயத்தோரே'' என முடிகிறது. திருமூல நாயனார் கூறிய எல்லா ஆகமங்களையும் கற்றுத் திருமூல நாயனாரோடு கலந்தருளின காலாங்கர். அவ்வழியே அவரது மாணாக்கர்கள் ஐவரும் மூலர் நிராமயத்தோடு கலந்தருளினவர்கள்.

நிற்க, கஞ்சமலைச் சித்தர் யார் என்பதும் எங்குத் திருமூல நாயனாரை யடைந்தனர் என்பதும் திருமந்திரத்தில் காணப்படவில்லை. திருமந்திரத்திலிருந்து திருமூலரது மாணாக்கர் ஏழுபேர்களுள் கஞ்சமலைச் சித்தர் ஒருவர். அவர் திருமூல நாயனாரால் காலாங்கி கஞ்சமலையன் எனப் போற்றப்பட்டவர். திருமூலருடன் கலந்தருளினவர். கஞ்ச மலையான் என்றும் காலாங்கி கஞ்சமலையன் என்றும் திருமூலர் வாக்கில் கூறுவதால் திருமூலர் மரபில் வகுத்த மடம் ஏழில் கஞ்சமலை ஒன்று என்பது தெளிவாகத் தெரிகிறது. "கஞ்சமலைச் சித்தர்'' எனப் பெயர் வந்த காரணமும் இவர் இயற்பெயர் சுந்தரன் என்பதும் "கரபுரநாதர்'' புராணத்தில் காணப்படுகின்றன.

## 6. பெயர்க் காரணம் :—

இனிக் கஞ்சமலையைப் பற்றியும் கஞ்சமலைச் சித்தரைப் பற்றியும் விரிவாகக் கூறும் கரபுர நாதர் புராணத்தைப் பார்ப்போம்.

கலிங்க நாட்டில் வேத மங்கலம் என்பதொரு ஊர். அங்குச் சுந்திரன் என்னும் பேருள்ள அந்தணர் பிறந்தார். அறுவகைச் சமயங்களிலும் சைவசமயமே சிறந்ததெனத் தெளிந்தார். சிவதலங்கள் தோறும் சென்றார். சிவபெருமானே முழுமுதற் கடவுள் எனப்பணிந்தார். கொங்கு நாட்டில் பஞ்சாக்கரநதி என்னுந் திருமணிமுத்தாற்றங் கரையில் உள்ள கரபுரநாதரை வணங்கி அங்குத் தங்கினார். தினந்தோறும் சரியை நெறியில் சிவபெருமானை அருச்சித்து வந்தார். அத்தலத்தில் சிவபெருமானை மான் மழு கருத்த கண்டம் யானைப் போர்வையோடு காணல் வேண்டும் எனக் கருத்துட்கொண்டார். ஆயிரம் யாண்டுகள்

அங்குத் தவம் செய்தார். இறைவன் அவ்வுருவத்தோடு தோன்றி வரமளித்தார். ஆயிரம் யாண்டுத் தவம் செய்த பக்தன் விரும்பிய வண்ணம் தோன்றினார் சிவபெருமான். உன்னை எனது முருகன் கணபதி என்னும் இருவரோடு சேர்த்து மூவராக் கொண்டோம். வேண்டும் வரம்கேள் என்றார். சித்தர் ஐயநாயேன் இம்மையிலே சித்தி யடைந்து இறவாமலிருக்க வரம் வேண்டும் என்றார். அவ்விதமே கொடுத்தோம். கிரேதை திரேதை துவா பரம் என்ற மூன்று யுகத்தும் இங்கு இவ்வுருவத்தோடு எமைப் பூசிப்பாய். கலியுகத்தில் அரூபியாய் நின்று எமைப் பூசிப்பாய். இன்று முதல் இவ்விடத்தைவிட்டு நீங்காது கஞ்சமலைச் சித்தரெனப் பேர் கொண்டு கஞ்ச மலையில் உள்ள கருங்காட்டினில் காவல் புரிந்துவா என வரமளித்தார்.

## ஆசிரிய விருத்தம்

"காளகண்டம் புயநான்கும் முகமைந்தும்
முடியாறும் கண்மூ வைந்தும்
நீளொளிசேர் தருமழுமான் விழிகாணக்
காட்சிதர நிமல நாதர்
மாளவே பவவாரி யானந்தக்
கண்ணினீர் மார்பில் வாரத்
தாளிரண்டு மேதனது முடிமேலா
கத்தொழுது சாற்று கின்றான்." 1

"திசைபத்தாய் நவகண்ட மாகியே
வரையெட்டாய்த் தீவே ழாகி
அசைவில்பதம் ஓராறாய் பூதமோ
ரைந்தாகி யறங்கள் நான்காய்
இசையுமூ வுலகாகிச் சராசரங்கள்
இரண்டாகி ஏக மான
பசுபதியே பாண்டரங்கா எனவணங்கி
நெஞ்சுருகிப் பழிச்சி னாரே." 2

"பரமனார் கூறுகின்றார்

சிறுவராங் கந்தனுக்குங் கணபதிக்கு
நிகராகச் சிந்தை செய்தோம்
நெறியினால் நின்பூஜை மகிழ்ந்தனம்யாம்
நினைத்தவரம் நிகழ்த்தாய் என்றார்." 3

அம்மொழிகேட் டந்தணனும் அகங்குளிர்ந்தே
மனமுருகி ஐய நாயேன்
இம்மையிலே சித்தியடைந் திறவாமல்
இருக்கவரம் ஈவாய் என்ன
கொம்மைமுலை மாதுபங்கன் அகமகிழ்ந்து
மறையோய்கேள் சார்ந்த வன்பின்
செம்மையாய் இவ்விடத்தில் நீங்காமல்
எமைப்பூசை செய்வா யென்றும்.'; 4

"கலியுகத்தில் பூசிப்பாய் அரூபியாய்
ஒருவருமே காணா வண்ணம்
மலிபுகழ்சேர் கஞ்சமலைச் சித்தரெனப்
பேர்கொண்டு வாழ்க நீயே
உலகிலுனைப் பூசித்தார் எமைப்பூசை
செய்தபலன் உண்ட வர்க்கே
கலர்களாய் உனையிகழ்ந்தோர் எமையிகழ்ந்த
பாதகராங் காணுங் காலே." 5

வேறு

"இற்றை நாள்முதல் இவ்விடம் நீங்கலாய்
பற்றி வாழ்ந்து பகர்கருங் காட்டினில்
சுற்றி யார்க்கும் மருந்துதோன்றுவகை
உற்ற; தன்மையுன் காவலுண்டாக்குவாய்." 6

—கரபுர நாதர் புராணம்

இந்தப் புராணக்கதையி லிருந்து கஞ்சமலைச் சித்தரின் இயற் பெயர் சுந்தரன் எனத் தெரிகிறது. கரபுர நாதர் தரிசனங் கொடுத்துக் "கலியுகத்தில் அரூபியாய் ஒருவருமே காணாவண்ணம் கஞ்சமலைச் சித்தரெனப் பேர்

கொண்டு வாழ்க நீயே" எனக் கூறியதிலிருந்து இவர் கஞ்ச மலைச் சித்தரெனப் பெயர் பெற்றார். திருமூல நாயனார் இவரை இப்பேர் பெற்ற பிறகு மாணாக்கராய்க் கொண்டார் என்பதுந் துணிவு. இங்ஙனம் இவர் ஆயிரம் ஆண்டு சிவபூசை நெறியில் வழுவாது நின்று வரம் பெற்றார். இதைத் திருமந்திரத்தில்,

"நேர்ந்திடும் மூல சரியை நெறியிதென்று
ஆய்ந்திடும் காலாங்கி கஞ்ச மலையமான்
ஓர்ந்திடுங் கந்துரு கேண்மின்கள் பூதலத்து
நேர்ந்திடும் சுத்த சைவத் துயிரதே."

என்னும் செய்யுளில் "நேர்ந்திடும் மூல சரியை நெறி இது என்று ஆய்ந்திடும் காலாங்கி கஞ்ச மலையமான்" என விளக்குவதால் சரியை நெறியில் நின்று சிவன் அருள் பெற்ற காலாங்கி கஞ்சமலையமான் என்று அறியலாம். கிரியை நெறியிலே நின்று திருமூலரை யடைந்தார். யோகமும் ஞானமும் கைவரப் பெற்று கரபுரத்தில் சிவ பெருமான் அருளியவாறு கஞ்சமலையில் திருமூலர் மரபில் மடங்கண்டு தம்மாணாக்கர்களோடு இருந்தார் என அறியலாம். சரியை நெறியைத் திருமந்திரம்.

உயிர்க்குயிராய் நிற்றல் ஒண்ஞான பூசை
உயிர்க்கொளி நோக்கல் மகாயோக பூசை
உயிர்ப்பெறு மாவா கனப்புறப் பூசை
செயிர்க்கடை நேசஞ் சிவ பூசையே. 1

நாடு நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே. 2

பத்தர் சரிதை பாடுவோர் கிரியையோர்
அத்தகு தொண்டர் அருள்வேடத் தாகுவோர்
சுத்த வியமாதி சாதகர் தூயோகர்
சித்தர் சிவஞானம் சென்றெய்து வோர்களே. 3

சார்ந்தமெய் ஞானத்தோர் தானவ னுயிஞேர்
சேர்ந்தவெண் யோகத்தர் சித்தர் சமாதியோர்
ஆர்ந்த கிரியையோர் அருச்சனை தப்பதோர்
நேர்ந்த சரியையோர் நீள் நிலத்தோரே." 4

இந்நான்கு செய்யுட்களில் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கினையும் தெளிவாக விளக்குகிறார். "அருச்சனை தப்பாதோர் நேர்ந்த சரியை யோர்" "செயிர் கடை நேசம் சிவபூசையே" "நாடு நகரமும் நற்றிருக் கோயிலும் தேடித்திரிந்து சிவபெருமான் என்று பாடு மின்; பாடிப் பணிமின்; பணிந்தபின் கூடிய செஞ்சத் துக் கோயிலாக் கொள்வன்" எனத் திருமந்திரத்திலே விளக்கப்பட்ட சரியை நெறி ஆய்ந்திடுங் காலங்கி கஞ்ச மலையமான் என்று கூறுவதை அறியலாம். கரபுரநாதர் புராணத்தில் கஞ்சமலைச் சருக்கத்தில் வரும் மற்றுமோர் கதையும் அறியத்தக்கது. அஃது கொங்கு மண்டல சதகத்தில் ஒரு செய்யுளில் விளக்கப்படுகிறது. அச் செய்யுள் பின்வருமாறு.

## விருத்தன் குமரனது

உலையில் அமுது படைத்துண்டு சீடன் ஒளித்திருப்பத்
தலையில் மயிருங் கருக்கக் கண்டே அவன் சற்குருவும்
நிலையுடன் கக்குவித் துண்டு அடைந்தான் நந்நெறியில்
கஞ்ச
மலையில் அதிசயம் கண்டதுவுங் கொங்கு மண்டலமே.

உலை வைத்துச் சமைத்துச் சாப்பிட்டுத் தன்னுருவம் மாறிவிட்டதால் மாணக்கனது முன்னுருத் தெரியாமல் நரைதிரை மாறியிருக்கக் கண்ட அவனது சற்குருவும் தன் சீடன் சாப்பிட்ட உணவைக் கக்கச் செய்து அதனை யுண்டு தானும் பாலகனுன அதிசயத்தைக் கண்டதும் கஞ்சமலையில் கொங்கு மண்டலமே.

— கொங்குமண்டல சதகம்

இக்கதை கரபுரநாதர் புராணத்தில் வருமாறு.

மூலன் என்ற அந்தணன் ஒருவன் உடல் இருகிக் காயசித்தி பெறுதற்குத் தன் மாணுக்கனேடு இம்மலைக்கு வந்தான். மாணுக்கன் நரைதிரை மேவிய கிழவன். மாணுக்கனைச் சமையல் செய்யச் சொல்லிவிட்டு மூலன் மூலிகை தேடிச் சென்றான்.

மாணுக்கன் கொதிக்கும் சோற்றைக் கீழேகிடந்த ஒரு குச்சியால் துழவ சோறு கறுத்தது. அக்கறுத்த சோற்றைக் குருவுக்குப் போட அஞ்சித்தானுண்டான். உண்டதும் நரைதிரை மாறி ஈரெட்டாண்டுப் பாலகனுனன். குரு வந்து இங்கிருந்த கிழவன் எங்கே என, யானே அக்கிழவன் எனக் கூறி வணங்கி நடந்ததைச் சொன்னுன். துளவிய கொம்பு எங்கே என அடுப்பில் போட்டேன் என்றான். குரு உண்ட சோற்றைக் கக்கு எனக் கூறிக் கக்கியதைத் தானுண்டார். குருவும் இளமை பெற்றார்.

விருத்தம்

“துளவிய கொம்பெங் கென்றான்
சுள்ளியிற் போட்டே னென்றான்
வழாதுநீ உண்ட சோற்றை
வாயினில் கக்கென் றோத
விழாதசோ றதனைக் கக்க
மிச்சிலைக் குருவும் உண்டான்
தோழாரேவர் இவர்கள் தம்மைச்
சுந்தரப் பால ராஞர்.”

கரபுர நாதர் புராணம்

இக் கதையை ஆராய்வோம். புராணம் என்று அடியோடு மறுப்பதில் பயனில்லை. புராணங்களில் பல நிறைந்த உண்மைகள் காணலாம். காணல் வேண்டும். மேற்கூறிய செய்யுள் “தோழாரேவர் இவர்கள் தம்மைச் சுந்தரப் பாலராஞர்” என முடிகிறது. இதில் சுந்தரப் பாலராஞர் என்பது நயம்படக் கூறப்பட்ட அழகிய

தொடர். இரு பொருள் அழகாகத் தொனிப்பது காண்க. அழகுள்ள பாலர்கள் ஆனார்கள் என்பது ஒன்று. (இரண்டு) சுந்தரர் என்ற பெயர் படைத்த இருவரும் பாலர் ஆனார் என்பது. கஞ்சமலைச் சித்தர் கலிங்க நாட்டிலிருந்து வந்த சுந்தரன் என்னும் அந்தணன். சிவ தலங்கள் தோறும் சென்று சிவனைப் பணிந்து கரபுரத்தில் வந்து ஆயிரம் யாண்டுத் தவம் செய்த கிழவர். திருமூல நாயனார் சாத்தனூரில் மூலன் யாக்கையுள் புகுந்த சுந்தரன் என்னும் இயற்பெயர் பெற்றவர். இஃது,

"வந்த மடமேழும் மன்னும்சன் மார்க்கத்தின்
முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை
தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்
சுந்தரன் ஆகமச் சொல்மொழிந் தானே"

என்னும் திருமந்திரச் செய்யுளால் தெரிகிறது. பின்னர் திருமூலர் "நந்தி அருளாலே நாதனாம் பேர் பெற்றோம்" என்கிறார். இஃது,

"மந்திரங் கொண்டு வழிபடு வோர்க்குச்
சுந்திர நாதன் சொல்லிய மந்திரம்
நந்தியென் நாதன் நாவார வோதினன்
பைந்தொடி மேனிப் பயனது தானே"

என்னும் திருமந்திரத்தால் தெரிகிறது. கஞ்சமலைச் சித்தர் திருமூல நாயனாரின் சிறந்த மாணாக்கருள் ஒருவர் என்பது திருமூலர் வாக்கால் தெரிவதாம். அஃது மறுக்க முடியாத உண்மையாம். திருமூல நாயனார் திருக்கைலாயத்திலிருந்து இருமுறை தென்னாடு வந்தார் என்பது பலர் துணிபு. திருமந்திரத்தில் "மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் என்பதாலும் மாலாங்கன் இந்திரன் கந்துரு காலாங்கி கஞ்சமலையான் என இந்நால்வரையும் தனித் தனி திருமந்திரத்தில் குறிப்பதாலும் மற்ற மூவரையும் குறியாததாலும் கஞ்சமலைச் சித்தரோடு நால்வரும் திருமூல நாயனார் சுந்தரநாதன் என்ற இயற்பெயரோடு வந்த காலத்தில் மாணாக்கராயினார்கள். அப்போது சரியை நெறியின் வழி ஆராய்ந்து ஆயிரம் யாண்டு சிவபூசை

ஆற்றிய கலிங்க நாட்டுச் சுந்தரன் கரபுரநாதரால் கஞ்சமலைச் சித்தரெனப் பேர்கொண்டு சுந்தரநாதரைக் குருவாகக் கொண்டனர். முதற்கண் வந்தபோது திருமூலர் காயசித்தியை நாடித் திருக்கூத்துக் காணவந்தார். அது காலை இருவரும் "சுந்தரப் பாலரானார்". "தொழாரெவர் இவர்கள் தம்மைச் சுந்தரப் பாலரானார்" என்ற தொடர் இவர்கள் "எனவும்" "பாலர்" எனவும் பன்மையில் கூறுவது காண்க. அன்றேல்:—கரபுரநாதர் புராணத்தில் மூலன் என்னும் அந்தணன் ஒருவன் தன் சீடனோடு வந்ததாகக் கூறுவதால் திருமூல நாயனார் மூலன் யாக்கையுள் புகுந்தவர் தம் யாக்கையைத் தேடிக்காணாமை கண்டு இதுவும் நந்தியருள் எனத் திருவாவடுதுறைக்குச் செல்லுமுன் மூலன் யாக்கை இறுகிக் காயசித்தி பெற மூலிகை தேடிக் கஞ்சமலைக்கு வர, ஆங்கு கஞ்சமலைச் சுந்திரன் சரியை நெறியில் நின்று வரம்பெற்ற வரலாறு கேட்டு அவரைத் தம் மாணாக்கராகக் கொண்டார் எனவும் அறியலாம். இஃது கீழ்க் குறித்த திருமந்திரத்தால் ஒருவாறு துணியலாம்.

> "நந்தி யருளாலே மூலனை நாடிப்பின்
> நந்தி யருளாலே சதாசிவ னாயினேன்
> நந்தி யருளால் மெய்ஞ்ஞானத்துள் நண்ணினேன்
> நந்தி யருளாலே நானிருந் தேனே"

இதில் நந்தி யருளால் மூலனை நாடிப் பின் நந்தியருளால் சதாசிவனாயினேன் என்பதால் மூலன் யாக்கையுள் புகுந்த பின்னர் சதாசிவ மாயினார் என்பது விளங்குகிறது, எனவே நந்தியருளால் மூலன் யாக்கையுள் புகுந்தது சாத்தனூரில். நந்தியருளால் சதாசிவமாயினது கஞ்சமலையில். (இஃது வியோம சரீரமுற்று காயசித்தி பெற்றது) நந்தியருளால் மெய்ஞ்ஞானத்துள் வைகியது திருவாவடுதுறையுள். நந்தி அருளால் அரசடியில் நானிருந்தேனே என்பது திருமூலர் வாக்கு. இச்செய்யுளில் நந்தி அருளால் மூலனை நாடிப்பின் சதாசிவனாயினேன். பின் ஞானத்துள் வைகினேன் என்பது கருதத்தக்கது.

"கலந்தருள் காலாங்கர் தம்பால் அகோர
நலந்தரு மாளிகைத் தேவர் நாதாந்தர்
பலங்கொள் பரமானந்தர் போகதேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத் தோரே"

என்ற முன்னர்க் கூறிய திருமந்திரச் செய்யுளில் "கலந்தருள் காலாங்கர்" என்ற தொடரும் கரபுரநாதர் புராணத்தில் வந்த செய்யுளில் "தொழாரெவர் இவர்கள் தம்மைச் சுந்தரப் பாலராஞர்" என்ற தொடரும் குருவும் மாணுக்கருமாகிய சுந்தரர் இருவரும் கலந்தருளியதை விளக்குவதாம். திருமூலர் தம் மாணவர் எழுவருள் காலங்கியை மட்டும் கலந்தருள் காலாங்கர் எனக் குறிப்பதுவே சாலப் பொருத்த முடையதாம்.

நிற்க :

"வித்தகமாகிய வேடத்தர் உண்ட ஊண்
அத்தன் அயன்மால் அருந்திய அன்னமாம்
சித்தம் தெளிந்தவர் சேடம் பருகிடில்
முத்தியாம் என்றுநம் மூலன் மொழிந்ததே"

என்ற திருமந்திரச் செய்யுளில் "வித்தகமாகிய வேடத்தர் உண்ட ஊண் அத்தன், அயன், மால், அருந்திய அன்னமாம்" என்றதில் "வித்தகமாகிய வேடம்" என்பது.

"நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது"

என்ற திருக்குறள் கருத்தோடு சிந்திக்கத் தக்கது. "சித்தம் தெளிந்து அவர் சேடம் பருகிடில் முத்தியாம் என்று மூலன் மொழிந்ததே" இஃது இருவரும் கலந்தருளும் காட்சியைத் தெளிவு படுத்துவதாகும். சீடர் கக்கிய சோறு மூலர் உண்டார் எனக் கூறுவது காணச் சினம் பெருகும். சித்தம் தளரும். . அதுவே மாய்மையின் தன்மை. மதிமயக்கம். கஞ்சமலைச் சித்தருக்குச் சித்தன் கணபதி முருகன் இருவரோடு மூவராக கஞ்சமலையில் காவலிருக்க வரங்கொடுத்தார் முன்னே. மூலர் வந்தார் பின்னே. கஞ்சகிரி சிவம் கிழவராக முன்னே வழிகாட்டி

நடந்தார். மூலன் கூட்டில் புகுந்த மூலன் மூலிகை நாடி ஞர். அதுதான் கருநெல்லி. அதுகாட்டவே சிவம் கஞ்ச கிரியாய் வந்து முருகனைய் மாறி மலையே சிவமாய் அடி யில் ஞானகுரு சரவணனைய் நின்றுநெல்லில் குற்றம்நீங்கிய அரிசிபோல் கருவில் சாராது நீக்குங் கருநெல்லி உள்ளத் தின் உண்மையை ஊட்டினர், என்பதுவே புராண உண்மை. விள்க்கம் திருமந்திரத்தில் "வித்தகராகிய வேடத்தர்' என்பது சிவபெருமானை என்று அறிவோ மாக. "நெல்முளை தவிடு உமி நீங்கி'' என்ற திருமந்தி ரம் செய்யுள் விளக்கம்.

பித்தர் என்று பேசுவார் பிதற்றுகின்ற நூல்களில்
சித்தர்மூலர் சீடராய் சீதறுகின்ற தென்னவோ
சுத்தமான சோறுகக்கி உதவுகின்ற தொல்லையும் (லவோ.
புத்திஎன்றும் போதம் என்றும் புகன்றதும் பொய் அல்

இல்லை இல்லை இயம்புவேன் புராணமும் பொய் அல்லவே
நல்ல நல்ல நயம்படப் புகன்றநூல்கள் நாட்டிலே
தொல்லை என்ற தோற்றமும் துலக்கமாக தோன்றிடும்
அல்லவில்லை அல்லவில்லை அதுவிளக்க மாகுமே. 2

மூலரோடு வந்து கஞ்ச முனிமறைந்த மூலமும்
சீலமாக நின்ற சிறுவர் செப்புகின்ற சீலமும்
நீலமாய்க் கருத்த சோறு நின்றசிறுவர் உண்டதும்
ஞாலமீது நாயமின்று ஞானமின்று நாடுவோம். 3

பாலனைக வந்து நின்ற பைந்தமிழ் முருகனும்
மூலரோடு வந்து கஞ்சகிரியும் மோன சிவம் அது
சீலமாய்க் கருத்த சோறு சேர்ந்தவானம் மலையுமாம்
கோலமாய்க் குழந்தை வேலன் கோயில்கொண்ட
[கிரியிலே.

## சாதல் நீக்கும் அருநேல்லி

சாதலை நீக்கும் அருநெல்லி தன்னைத்
தமிழ்ச் சொல் ஔவைக்கு
ஆதரவோடு கொடுத்தவன் கன்னலை
ஆங்கு நின்று

மேதினிமீது கொடுவந்து நட்டவன்
மேன்மரபோர்
மாதிடம் சூழரண் மேவுவதூஉளங்
கொங்கு மண்டலமே.

நெடுநாள் வாழும்படி செய்யும் அருநெல்லிக்கனியை அவ்வையாருக்குக் கொடுத்தவனும் இவ்வுலகில் கரும்புப் பயிரைக் கொண்டுவந்து நட்டு உற்பத்தி செய்வதன் வழி வந்தவனும் கொல்லிக்கூற்றமாகிய மலையரண் உடையவனு மாகிய அதிகமானும் கொங்கு மண்டலமே.

குறிப்பு :—தகடூரை (தருமபுரியை)த் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்தவன் அதிகமான். இவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன் ஒருநாள் பருத்திப் பள்ளி நாட்டில் உள்ள கஞ்சமலை மீதுள்ள கருங்காடு என்னும் பாகத்தில் சஞ்சரித்தான். அப்பொழுது ஒரு துறவி ஒரு நெல்லிக்கனியை மன்னனிடம் கொடுத்து இந்தக் கனியை உண்டவர்களுக்கு நரைதிரை சாராது. நீடித்த நாள் உயிர்பெற்றிருக்கச் செய்யும். இதனை நீ அருந்துவையேல் நெடுநாள் நற்புதல்வர்களைப் பெற்று தமிழை ஆதரித்து வளர்த்து நாட்டை நீதியோடு காப் பாய் எனக் கூறிக்கொடுத்தனர். ஏற்றுக்கொண்ட அதிகமான் அக்கனியை வைத்திருந்து அவ்வையார் வந்த வுடன் அதன் வரலாற்றைக் கூறி நாக்கிழத்தியாரே இதை உண்டு நீடித்த நாள் வாழ்ந்துகொண்டு அரிய நூல்கள் இயற்றி உலகத்தைத் திருத்துவீர்கள் எனக் கூறித் தந்தான். —கொங்கு மண்டல சதகம்.

இஃது கரபுர நாதர் புராணத்தில் விரிவாகக் கூறப் பட்டுள்ளது. அது பின்வருமாறு :—

## ஆசிரிய விருத்தம்

1. துதிகொள் ஆதியும் பகவனும் கூடவே
தோன்றிய எழுவோருள்
கதிநல் ஆடவர் மூவரா மவர்பெயர்
கபிலர் வள்ளுவரோடு

அதிக மானெனும் சேரலன் முடிபுனை
அரசனும் பெண்பாலார்
முதிய அவ்வையும் உப்பையும் வள்ளியும்
உறுவையும் எனநால்வர்.

2. "பூதலத்தினில் அதிகமான் மணிமுடி பொறுத்
தரசியற் றுங்கால்
காதலாய்க் கருங்காட்டினில் சித்தரைக்
கண்டுவந் தனைசெய்து
வீதலின்மருந் தொன்றரு ளென்னனும்
விண்புகழ் கருநெல்லி
தீதிலாக்கனி ஒன்றினை உதவவே
சேரலன் மகிழ் வெய்தி."

இச்செய்யுளில் அதியமான் மணிமுடி பொறுத் தரசியற்றினான். அவனது தலைநகர் தகடூர், அவன் கஞ்சமலையில் உள்ள கருங்காட்டிற்கு வந்தான். சித்தரைக் கண்டான் இறவா மருந்து ஒன்று வேண்டினான். சித்தர் விண்புகழ் கருநெல்லி ஒன்று கொடுத்தார்.

இந் நெல்லிக் கனியை அதிகமான் அவ்வையாருக்குக் கொடுத்த கதை பல நூல்களில் விளக்கப்பட்டிருக்கிறது.

........................."மால் வரைக்
கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி
அமிழ்து விளை தீங்கனி ஔவைக்கீந்த
வுரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவேல்
அரவக் கடற்றானை அதிகனும்"

எனப் பத்துப் பாட்டில் சிறுபாணாற்றுப் படையில் பாடப்பட்டிருக்கிறது. இச்செய்யுளில் "மால்வரை கமழ் பூஞ்சாரல் கவினிய நெல்லி அமிழ்து விளை தீங்கனி" என விளக்கப்பட்டிருக்கிறது. மால்வரை என்றது பெரிய மலை. இதுவே கஞ்சமலை. கமழ் பூஞ்சாரல் என்றது அம்மலையில் உள்ள கருங்காடு. நெல்லி அமிழ்து விளை

தீங்கனி என்பது நரைதிரை நீங்கி இளமையோடு சாதலை நீக்குங் கனி; அமிழ்த முண்டார் சாவாதிருத்தலால் இறவாதிருத்தலை விளைக்குங்கனி என்றார்.

"வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்
களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்
போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி
பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலை
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீந் தனையே."

—புறநானூறு 91-ம் பாட்டு

இஃது அவ்வையார் அதிகமானைப் பாடிய பாட்டு. இதில் "தொன்னிலை பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட சிறியிலை நெல்லித் தீங்கனி" என்பதால் மிகப் பழமையான மலை பெரியமலை என்பதும் மரத்தின்மேல் சிறிய இலையையுடைய நெல்லிக்கனி என்பதும் தெரிகிறது. விடரகத்தரு என்பது பொருள் விளங்கவில்லை இலை உதிரா மரங்கள் என்றும் நிழல் சாயா மரங்கள் என்றும் பல இருப்பதாகக் கரபுர நாதர் புராணத்தில் கஞ்ச மலைச் சருக்கத்தில் விளக்கப்பட்டுள்ளது. அத்தகைய பொருள் கொள்ளத் தகுமா என்பது அறிஞர் ஆராய்ந்தறியத் தக்கது.

வெண்பா

"பூங்கமல வாவிசூழ் புல்வேளூர்ப் பூதனையும்
ஆங்குவரு பாற்பெண்ணை யாற்றினையும் ஈங்கு
மறப்பித்தாய் வாளதிகா வன்கூற்றின் நாவை
யறுப்பித்தாய் ஆமலகந் தந்து."

—அவ்வை தனிப்பாடல்.

இதில் "வாளதிகா வன்கூற்றின் நாவை அறுப்பித்தாய் ஆமலகம் தந்து" நெல்லிக் கனியைத் தந்து கூற்றுவன் வாராதிருக்க வழி செய்தாய் என விளக்கினார்.

### வடமலை வெண்பா

"நெல்லியமு தவ்வைக் களித்துநெடு வேலதிகன்
மல்குபுகழ் கொண்டான் வடமலையே."

நீண்ட வேலாயுதத்தைத் தாங்கிய அதிகன் தான் பெற்ற நெல்லிக் கனியை அவ்வைக்குக் கொடுத்து நிறைந்த புகழைத் தன்னகத்துக் கொண்டான்.

### திருக்குறள்

"இனிய உளவாக இன்னாத செய்தல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

இக்குறட்பாவின் உரைக் குறிப்பில் ஆசிரியர் பரிமேலழகர் "இனிய கனிகள்" என்றது "ஔவையுண்ட நெல்லிக்கனிபோல் அமிழ்தாவனவற்றை" என்றார்.

இதுகாறுங் கூறிய கொங்கு மண்டல சதகம் கரபுரநாதர் புராணம் சிறுபாணாற்றுப்படை புறநானூறு ஔவை தனிப்பாட்டு, வடமலை வெண்பா திருக்குறள் உரைக் குறிப்பு முதலிய எல்லா நூல்களிலும் அதிகமான் நெல்லிக்கனி ஔவைக்குக் கொடுத்தது ஒருமுகமாகக் கூறப்பட்டுள்ளது. அக்கனி மலையிலிருந்து பெற்றது என்பதும் கூறப்பட்டுள்ளது. சிறுபாணாற்றுப் படையில் "மால் வரை" எனவும் புறநானூறில் "தொன்னிலைப் பெருமலை" எனவும் கூறுவது இக்கஞ்சமலையை என்பது துணிவு. கொங்கு மண்டல சதகத்தில் ஒரு துறவி கொடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது. கரபுரநாதர் புராணத்தில் கருங்காட்டுச் சித்தரை வேண்டிப் பெற்றதாக விளக்கப்படுகிறது. அதிகமான் அரசாண்டது தகடூர். தகடூர் தான் தருமபுரி என்பது பலர் ஆராய்ந்த முடிவு. தருமபுரிக்கு ஐந்து மைல் தூரத்தில் அதமங்கோட்டை என்னும் ஊர் ஒன்று உள்ளது. கோட்டைச் சுவர்கள் அடையாளம் காணப்

படுகின்றன. அதியமான் கோட்டை என்பது தற்காலம் அதமன் கோட்டை என மாறியது அதிசயமன்று, இத் தகடூரைப் பற்றியும் அதிகமானைப்பற்றியும் அச்சில் வராததொரு கொங்கு மண்டலச் சுவடிச் செய்யுள் காணப்படுகிறது. அதுகீழ் வருமாறு.

"விருந்து புறத்ததாத்தா னுண்டல் சாவா மருந்தெனினும்
திருந்து முணர்வினர் வேண்டாரென் வேதந்திறம்படவே
அரும்பெறல் நெல்லிக்கனியை யவ்வைக் களித்தானதிகன்
வருந்தவம் செய்யப் பொருந்தினதுங் கொங்கு
மண்டலமே."

## கையெழுத்துப் பிரதி

இச் செய்யுளில் அதிகன் அரும்பெறல் நெல்லிக் கனியை அவ்வைக்கு அளித்ததை ஆசிரியர்,

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"

என்னும் திருக்குறளுக்கு விளக்கமாக, திருந்து முணர் வினர் வேண்டார் என்னும் தமிழ் மறையின் திரு மொழியைத் திறம்படச் செய்து காட்டிய அதியமான் எனக் கூறுகிறார்.

## கஞ்ச மலை

கொங்கு நாட்டின் மலைவளங் கூறும் கையெழுத்துப் பிரதிச் செய்யுள் ஒன்று இருக்கின்றது அஃது கீழ் வருமாறு:

## கலித்துறை

"ஆனைமலை குருவெற்பு வராகம் அந்தண் கொல்லியும்
தேனமர் கொங்கணர் வைகை சேர்வை திரிமூர்த்திவெற்பு
ஈனமில் கஞ்சகிரி வெண்ணெய் ஓங்கல் எழில்அலைவாய்
வானுயர்ஊதி தலைமலையுங் கொங்கு மண்டலமே"

கொங்கு நாட்டின் பலமலைகளைக் கூறும் இச் செய் யுளில் கஞ்சமலை ஈனமில் கஞ்சகிரி எனச் சிறப்பித்துக்

கூறப்படுவது இம்மலையின் சிறப்பைக் காட்டுவதாகும். நரைதிரை நீங்கி என்றும் இளமையை யளிக்கும் கருநெல்லிக் கனியைத் தன்னகத்துக் கொண்டமலை. இம்மலைக்குக் கஞ்சமலை, சித்தர் மலை, அஞ்சனமலை, சஞ்சீவிமலை, எனப் பல பெயர்கள் உண்டு. இஃது கீழ்க் குறித்த செய்யுளால் விளங்கும்.

## விருத்தம்

கஞ்சனன் றுதவ லாலே
  கஞ்சவெற் பென்னு நாமம்
சஞ்சீவி மலையென் றோர்பேர்
  சாற்றுவர் சித்தர் கூட்டம்
தஞ்சமா யிருத்த லாலே
  தருசித்த வெற்பா மென்பர்
அஞ்சன வெற்பா மென்பர்
  அடர்கருங் காட்டி னாலே

—கரபுரநாதர் புராணம்

இம் மலை மேரு மலையையும், வெள்ளியங் கிரியையும், அகத்தியர் வாழும் பொதிய மலையையும் ஒத்தது. இஃது கீழ்க் குறித்த செய்யுளால் அறியலாம்.

## விருத்தம்

"கொங்கில்வி ளக்கெனு மண்டல நாற்றிசை
  கொங்கணர் முற்படுவோர்
இங்குள சித்தர்கள் உம்பர்முன் இந்திரன்
  எங்கும் நெருக்குறலால்
அங்கணர் பொற்கிரி வெண்கயி லைக்கிரி
  அம்பொதி யத்துடனே
கங்கையு தித்திடு குன்றுமி சைப்பர்கள்
  கஞ்சம லைக்கிணையே"

—கரபுரநாதர் புராணம்

இம் மலையில் இரசமும் பொன்கனியும் உற்பத்தியாவதோடு பல மூலிகைகள் இருக்கின்றன என்பது பல நூல்களால் தெரிகிறது.

### விருத்தம்

"தாமவேற் புண்ணைத் தீர்க்கும்
சல்லிய கரணி துண்ட
மாமது பொருந்தச் செய்யும்
சந்தான கரணி ஆழிப்
பூமியின் இரணந் தீர்க்கும்
சாவல்ய கரணி போகச்
சாமுயிர் தன்னை மீட்கும்
அமிர்த சஞ்சீவி தானும்"

— கரபுரநாதர் புராணம்.

வேலால் தாக்கப்பட்ட புண்ணை ஆற்றும் சல்லிய கரணி. துண்டமானதைப் பொருந்தச் செய்யும் சந்தான கரணி. இரணமான புண்களைத் தீர்க்கும் சாவல்ய கரணி. இறந்தாரை எழுப்புவிக்கும் அமிருத சஞ்சீவி என இன்னம் பல மூலிகைகளும் கருநெல்லி கருவாழை முதலிய பல நிழல்சாயா மரங்களும் இலை உதிரா மரங்களும் இருப்பதாகவும் இப்பாகமே கருங்காடு எனவும் கூறப்படுகிறது. இம் மருந்துகளையே கம்ப ராமாயணம் தெளிவாகக் கூறுகிறது.

### விருத்தம்

மாண்டாரை யுய்விக்கும் மருந்தொன்றும்
உடல்வேறு வகிர்களாகக்
கீண்டாலும் பொருந்துவிப்ப தொருமருந்தும்
படைக்கலங்கள் கிளைப்ப தொன்றும்
மீண்டேயும் தம்முருவே யருளுவதோர்
மெய்ம்மருந்து முளநீவீர
ஆண்டேகிக் கொணர்தியென அடையாளத்
தொடுமுரைத்தா னறிவின் மிக்கான்

—கம்பராமாயணம் மருத்துமலைப் படலம்

## 10. எல்லாச்சித்தும் கைவரப் பெற்றவர்

இவர் சிவபெருமானல் வரம்பெற்று கஞ்சமலையில் உள்ள கருங்காட்டைக் காவல் காப்பவர். சித்தர்கள்

இவரிடம் உத்திரவு பெறுது மலைக்குச் சென்றால் மூலிகை கிடைக்காது. கரபுநாதர் புராணத்தில் இதை விளக்கும் கதை ஒன்று உளது.

கோரக்கன் என்னும் சித்தன் வந்தான். கஞ்சமலைச் சித்தரைக் காணுது மலைக்குச் சென்றான். சித்து மூலிகை கிடைக்கவில்லை. சோகத்தோடு கஞ்சமலைச் சித்தரிடம் வந்து வாதுக்கழைத்தான். முன்னொரு காலம் நான் அல்லமதேவனிடம் சென்றேன். என் சித்தின் வல்லமையைப் பார் எனக் கூறினேன். என் தேகத்தைத் தட்டிப்பார் என்றேன். தட்டினார் தேகம் வெண்கலத்தைப் போல் கலகல வென ஒலித்தது. அல்லமதேவர் சிரித்தார். இதுதாஞ சித்து என்றார். தன் உடைவாளை உருவி என்னிடம் நீட்டினார். வாங்கினேன். அவ்வாளால் தன்னை வெட்டச் சொன்னார், வெட்டினேன். அவர் தேகம் நீரைப்போல் பிரிந்து நின்று கூடிற்று. இதுதான் சித்து என்றார். அதுபோல் உனக்கு என்ன சித்து வரும் சொல் எனக் கேட்டான் கோரக்கன். யான் சிவபெருமானால் எல்லாச் சித்தும் கைவரப் பெற்றவன் என்றார் கஞ்சமலைச் சித்தர். கோரக்கன் பணிந்தான். யான் உம்மிடம் வாது செய்ய வரவில்லை. சிநேகம் செய்துகொள்ளவே வந்தேன் என்றான். இருவரும் நட்பினராயினர்.

## 11. காலம் :

திருமூலர் காலம் இற்றைக்கு ஏறக்குறைய 8000 ஆண்டுகள் எனத் தெளிவாக ஆராய்ச்சியாளர் பலர் கூறுவர். அவரது மாணக்கரது காலத்தையும் அதைக் கொண்டு தெளிவதே சாலச்சிறந்தது. எனவே திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டுள்ள திருமூல நாயனார் அருளிச் செய்த திருமந்திரத்தில் முகவுரையில் துடிசைக்கிழார் அ. சிதம்பரனார் B. A. அவர்கள் கஞ்சமலைச் சித்தரைப் பற்றிச் சிறு குறிப்பு எழுதியிருக்கின்றார். அது வருமாறு :—

"சிவயோக மாமுனி என்றாலும் சிவமுனி சித்தசன் என்றாலும் ஒன்றே. அவரும் தென்னாட்டில் பல சித்தர்களுக்குப் போதித்துப் பல மடங்கள்ஸ்தாபித்துள்ளார்.

திருமூலரும் திருவாவடுதுறையில் அமர்ந்து "மூவாயிரந்தமிழ்" என்ற திருமந்திர நூலைச் செய்து முடித்து தம்முடைய ஏழுசிடர்களுக்கும் போதித்து அவர்கள் மூலமாக ஆகமங்களின் கருத்துக்களை உலகில் பரவச் செய்தார். அவ்வேழ சிடர்களும் ஏழு மடங்கள் ஸ்தாபித்துத் தம்முடைய சிடர்களுக்குப் போதித்து வந்தார்கள்.

காலாங்கர் என்பதும் காலாங்கிக் கஞ்சமலையன் என்பதும் காலங்கி கஞ்ச மலையா என்பதும் ஒருவரையே குறிக்கும்.

காலங்கர் என்பவர் மலைமன்னர் என்று சொல்லப்படும் உடையார் வகுப்பைச் சேர்ந்தவர் என்றும் அவரைக் கஞ்ச மலைச் சித்தர் என்று சொல்வதும் உண்டு என்றும் அறிகிறோம். கஞ்சமலை என்னும் ஊரை இப்போது சித்தர் கோயில் என்று வழங்குகிறார்கள்."

இக்குறிப்பிலிருந்து கஞ்சமலைச் சித்தர் கஞ்சமலை என்னுமிடத்தில் திருமூலர் மரபில் ஓர் மடங் கட்டுவித்துத் தம் மாணாக்கர்களுக்குப் போதித்து வந்தனர் என்பதும் தற்போது சித்தர் கோயில் என வழங்குகிறது என்பதும் தெளிவாகத் தெரிகிறது. அந்நூலில் திருமூலர் கி. மு. 6000 முதல் கி. மு. 100 வரை வாழ்ந்தவர் என ஆராய்ச்சியோடு கூறுகிறார். இவ்வாராய்ச்சி சிந்து நதிக் கரையில் உள்ள அரப்பா - மோகஞ்சிதாரோ என்னும் இடங்களைத் தோண்டிக் கண்டு பிடிக்கப்பட்ட கட்டிடங்கள் பொருள்கள் எழுத்துக்கள் முதலியவற்றைக் கண்ட பின்னர் நிகழ்ந்தது.

"தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறு மறிவு" என்ற திருவள்ளுவ நாயனாரின் திருக்குறள் அமுத வாக்கைக் காலத்திற்கேற்பத் "தொட்ட

னைத்தூறு மறிவு" எனக்கொண்டு நமது நாட்டில் மறைந்து கிடக்கும் உண்மைகளை நாமே தோண்டிப் பார்த்து உண்மை அறிவுபெற ஏற்ற காலம் வரும்போது

"சிங்களம் சோனகம் சீனம் சாவகம்
கொங்கணம் குடகம் கொல்லம் துளுவம்
வங்கம் கடாரம் மகதம் கோசலம்
கங்கம் காச்மீரம் கலிங்கம் நேபாளம்
அங்கம் காந்தாரம் ஆகிய மொழிகள்
தங்கி வளரும் தமிழ் நாடென்ப"

என்னும் பாட்டின் உண்மை நிலையை அறியலாகும். இச் செய்யுளால் இப்பதினெட்டு நாட்டுமொழிகளும் தமிழ்த் தாயின் குழந்தைகள் என்பதும், இப்பதினெண் பாடையும் தமிழாம் என்பதும் தெளிவாம். இஃது திருமந்திரத்தில் வருமாறு காண்க.

"பண்டிதராவார் பதினெட்டுப் பாடையும்
கண்டவர் கூறும் கருத்தறிவா ரென்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்டமுதலா அரன்சொன்னவாறே"

என்பதால் இப்பதினெண் பாடையும் அறிந்தோர் தாம் அக்காலத்தே பண்டிதர் என்பதும் தெளிவு. கலிங்க நாடும் அக்காலத்தே தமிழ் வழங்கு நிலம் என்பது திண்ணம். அந்தணர் என்பது அறவழி நின்று தமிழறிவு பெற்ற தமிழர் என்பதுந் தெளிவு. இந்நூலுக்குக் கர்த்தராம் கலிங்க நாட்டுச் சுந்தரனும் அவரது குருவாம் இமயமிருந்து வந்த சுந்தரநாதரும் தனித் தமிழர்கள் என்பதும் தெளிவு. இஃது,

"அந்தண்மை பூண்ட அறவேள் ஆகமத்துச்
சிந்தைசெய் அந்தணர் சேரும் செழும்புவி
நந்துதல் இல்லை நரபதி நன்றாகும்
அந்தியும் சந்தியும் ஆகுதி பண்ணுமே"

என்னும் திருமந்திரச் செய்யுள் தெளிவுபடுத்தும்.

"அந்தணர் என்பர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லால்."

என்னும் திருக்குறள் உண்மை நிலையையும் அறியலாகும். தென்னாட்டில் அதுவும் கொங்குமண்டலத்தில் தோண்டி அறியவேண்டிய இடங்களும் உண்மைகளும் பலவுள. அக்காலத்தின் ஒளி சிறிது கண்ணுக்குத் தெரிகிறது. சீக்கிரம் கிட்டும் என நம்புவோமாக. நிற்க,

துடிசை கிழார் திரு. அ. சிதம்பரனார் அவர்கள் திருமூலர் வரலாறு கூறுவதில் "இது காறுங் கூறியவாற்றால் நம் திருமூலர் இராமாயண காலத்தவர் என்றும் அது இன்றைக்கு 8000 வருடங்கள் முன்னர் என்றும், சனகர்-சனந்தனர் - சனாதனர் - சனற்குமாரர்- சிவயோகமாமுனி மன்று தொழுத பதஞ்சலி-வியாக்ரமர்-உபமன்யு-வசிட்டர்-பஞ்சவடி அகத்தியர்-கவுசிகர் - கவுதமர்-சுதானந்தர்-தசரதராமர்-வாலிசுக்ரீவர்-இராவணன்-அனந்தகுண பாண்டியன் முதலியோர் திருமூலருக்குச் சம காலத்தவர் என்றும் அறிகின்றோம்." எனச் சொல்லியிருக்கிறார்.

இக்குறிப்பிற்குப் பொருத்தமாகக் கஞ்சமலைச் சித்தர் எனப் பெயர் கொடுத்த கரபுரநாதர் கோயில் கொண்டிருக்கும் கரபுரம் என்னும் ஊர் கஞ்சமலை யடிவாரத்தில் தென்புறம் சேலம்-கொமாரபாளையம் போகும் பாதையின் அருகில் உள்ளது. அவ்வூர்ப் புராணமாகிய கரபுரநாதர் புராணத்தில் அக்கரபுரநாதர் கோயில் காஞல் பிரதிட்டை செய்யப்பட்டது எனக் கூறப்பட்டுள்ளது உற்று நோக்கத்தக்கது.

"நம் திருமூலர் சுந்தரநாதன் என்னும் பெயருடன் முதல்தடவை தென்னாட்டுக்கு வந்து தில்லையில் தப்பிலா மன்றில் பதஞ்சலி வியாக்கிரமர்களுடன் தனிக்கூத்துக் கண்டது 8000 வருஷங்களுக்கு முன்னர் ஆகும்." இக்குறிப்பின் காலமே கலிங்க நாட்டிலிருந்து சுந்தரன் என்னும் அந்தணன் கரபுரம் வந்து சரியை நெறியிற் சிவபூசை செய்த காலம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அக்

காலத்திலேயே திருமூலரைக் குருவாகக் கொண்டனர் என்பதும் பொருந்தும்.

"மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்
ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்பும்
செழுஞ்சுடர் மூன்றொளியாகிய தேவன்
கழிந்த பெருமையைக் காட்டகில்லானே"

என்னும் திருமந்திரத்தில் தமது ஏழு சீடர்களில் மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் என்பதால் நால்வருக்கு ஒரு முறையும் மூவருக்கு ஒரு முறையும் மொழிந்தனர் என்பது தெளிவு.

1. "இருந்தவக் காரணங்கேள் இந்திரனே"
2. "மாலாங்கனே இங்குயான் வந்த காரணம்"
3. "நேர்ந்திடும் மூல சரியை நெறியிதென்று
ஆய்ந்திடும் காலாங்கி கஞ்சமலையமான்"
4. "ஒர்ந்திடுங் கந்துருகேண் மின்கள்"

என நால்வரைக் குறித்துக் காட்டுகிறார். மற்ற மூவர் பெயர்கள் எங்கும் வரவில்லை. ஆகையால் கஞ்சமலைச் சித்தரைச் சரியை நெறி ஆய்ந்திடும் கஞ்சமலையமான் என்பதைக் கொண்டும், சுந்தரநாதன் என்ற இயற்பெயர் கொண்டு திருமூலநாயனார் வந்த காலத்தே இந்நால்வரும் மாணாக்கராயினர். அப்போது நால்வருக்கும் பின்னர் இரண்டாவது முறை மூவருக்கும் உபதேசித்தார் என்பதும் சாலப் பொருத்தமுடையது.

திருவள்ளுவர் காலம் கி. மு. 75 முதல் கி. பி. 36 வரை எனக் கூறப்படுகிறது. திருவள்ளுவருடன் பிறந்த அதியமான் கஞ்சமலைச் சித்தரிடம் நெல்லிக்கனி பெற்று ஔவையாருக்குக் கொடுத்தது புறநானூறிலும் பத்துப் பாட்டிலும் தெரிகிறது. திருமூலர் இருந்த காலம் கி. மு. 100 வரை என்பதும் அதற்கு 25 வருடங்களுக்குப் பின்னர் அதிகமான் காலமாகத் தெரிவதாலும் கஞ்சமலைச் சித்தர் மடங் கண்டு வாழ்ந்த காலத்திற்கும் இது

பொருத்த முடையதேயாம். அதியமான் காலத்திற்குப் பின்னர் கஞ்சமலைச் சித்தர் தமது சீடர்கள் அகோரர் மாளிகைத் தேவர் நாதாந்தர், பரமானந்தர், போக தேவர் என்ற ஐவருக்கும் மடங் கண்டமைத்து விட்டு கஞ்சமலையில் தம் மடத்திலே கோயில் கொண்டருளி ஞர் என அறியலாம்.

## 12. மடங்கள் :

இக்கோயிலைச் சுற்றிலும் பல மடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. சன்னதிக்கு நேரே மேற்கு வாசலாக இருக்கும் அழகிய பெரிய கல்மண்டபம் சேலம் ஆரிய வைசிய மகாஜனங்களால் கட்டப்பட்ட பெரிய மடம். இதற்கு அடுத்தாப் போல் தெற்குப் பார்த்த வாசலாக வடபுறம் இருப்பது சேலம் சௌராஷ்டிர மகாஜனங்களால் கட்டப்பட்ட பெரிய மடம். கோயிலுக்கு அடுத்தாப்போல் வடபுறம் தெற்கு வாசலாக இருக்கும் மடம் சேலம் தேவாங்க சமூகம் உத்தமலிங்க செட்டி பசுவலிங்க செட்டியார்களால் கட்டப்பட்டது. கோயிலுக்குத் தென்புறம் வடக்கு வாசலாக இருக்கும் மடம் ஜலகண்டபுறம் செட்டியார்களால் கட்டப்பட்டது. தற்போது சிலமாய் இடிந்திருக்கிறது. இதற்குச் சேர்ந்தாப் போல் கிழக்குப் பக்கம் வடக்கு வாயிலாக இருக்கும் மடம் சேலம் திரு எல்லப்ப செட்டியாரால் கட்டப்பட்டது. தற்போது தேவாங்க சமூக மடத்திற்குப் பின்புறம் கோயிலுக்குச் செல்லும் முன் பாதைக்கு வலதுபுறம் கிழக்குப் பார்த்த வாயிலாக இருப்பது செவ்வாய்ப்பேட்டை திரு. பொன்னுச்சாமிச் செட்டியாரால் கட்டப்பட்ட அழகிய மடம். கோயிலுக்கு முன்னல் கிழக்கு வாசலுக்கு வெளிப்புறம் வடக்குப் பார்த்த வாயிலாக முடி எடுக்கும் பண்டிதர் மடம் ஒன்று அழகாகக் கட்டப்பட்டிருக்கிறது.

## 13. கோயில் நிர்வாகம் :

இக்கோயில் பக்கத்து கிராமங்களின் வன்னியகுல க்ஷத்திரிய சமூகத்தின் பட்டக்காரக் கவுண்டர் மரபினர்

களால் நிருவகிக்கப் பட்டுவந்தது. இவர்களுள் கொசவப் பட்டி கிராமம் திரு, பொன்னுசாமிக் கவுண்டர் அவர்கள் தருமகர்த்தாவாக நீண்டகாலம் இருந்து நிருவாகம் நடத்தி வந்தனர். தற்காலம் அரசாங்கத்தின் இந்து மத பரிபாலன போர்டாரால் மேற்பார்வை யிடப்பட்டு திரு வாளர்கள் பொன்னுசாமிக் கவுண்டர் 1. பட்டக்காரப் பெரிய ஏருக் கவுண்டர் 2. கிராம முன்சீப் சந்திரப்ப கவுண்டர் 3. இம்மூவரும் தருமகர்த்தாக்களாக நியமனம் செய்யப்பட்டிருக்கின்றனர். பிரதி அமாவாசை காலங் களில் உண்டிகை வைக்கப்படுகிறது. திருச்சங்கோடு தாலூக்கா கஜானாவிலிருந்தும் சேலம் சுகவனேஸ்பரர் தேவஸ்தான நிதியிலிருந்தும் வருடம் ஒன்றுக்கு 100 ரூபாய்க்குக் குறைந்த தொகை தஸ்தீக்காகக் கொடுக்கப் படுகிறது. தற்போது இருக்கும் தருமகர்த்தர்க்கள் கோயிலில் தென்புறம் வரும் சிறிய ஓடையில் சில தவணை களும் ஒரு குளமுங் கட்டியிருக்கின்றனர். நந்தவனம் ஒன்று பராமரிக்கப்படுகிறது.

## 14. கோயில் ஊழியர்கள் :

அர்ச்சக ஸ்தானீகம் : ஸ்தல குருத்துவ மிராசும், ஆசார்ய பீடமுமாக வுள்ள ஆதி சைவமரபில் வந்தவர். தற்போது இருப்பவர் திரு. கே. எஸ். பழனிசாமிக் குருக்கள் அவர்கள். தொன்று தொட்டு வந்த சைவாகம முறைப்படி இவர்கள் வழிவழியாக பக்தர்களை உபசரித்து வருகின்றனர். மாலை தொடுப்போர், நந்தவனம் பரா மரிப்போர், மேளம் வாசிப்போர் திருவலகிடுவோர் எனப் பல ஊழிய மிராசுதாரர்கள் உண்டு.

## 15. சிறப்பு நாட்கள் :

மாசி மாதம் சிவன் ராத்திரி சித்திரைமாதம் பௌர் ணமி இவ்விரண்டும் திருவிழாக் காலங்கள். சித்திரை அல் லது வையாசி பௌர்ணமிக் காலங்களில் சுற்று வட்டத் தில் உள்ள வேளாண்மை செய்வோர் தங்கள் தங்களுக்கு இஷ்டமான பலவித உணவுப் பொருள் தானியங்கள்

கொலம்டுவந்து சமையல் செய்து சித்தேஸ்பரருக்கு முன்னால் ஒன்றாய்ப் படைத்து ஒவ்வொருவரும் ஒரு பிடி எடுப்பார்கள். யாருக்கு எந்த உணவு கிடைக்கிறதோ அந்த தானியம் அவருக்கு விளைவு அதிகம் என நம்புகின்றனர். அங்ஙனம் கிடைக்கின்றது. பிரதி அமாவாசை தோறும் கணக்கிலடங்காத பக்தர் கூட்டம். ஆடி அமாவாசை தை அமாவாசைகளில் கூட்டம் மிகமிக அதிகம். சித்தரை நம்பி வாழ்க்கை நடத்துபவர்கள் அதியமான் அரசாண்ட தகடூர் என்னும் தருமபுரிப் பக்கம் மிக அதிகம். அப்பக்கமிருந்து சித்தரின் அருளை வேண்டி வந்து சில நாட்கள் உத்திரவு பெறும் வரை தங்கிச் செல்லுபவர் பலர். சேலம் நகரத்திலும் சித்தரின் பக்தர்கள் அதிகம். இக்கோயில் கட்டி முதலியாரால் கட்டப்பட்டது என்பர்.

## 16. சுற்று வட்ட கிராமங்கள் :

வடமேற்கில் **குசவப்பட்டி**. இது தற்காலம் குசப்பட்டி என வழங்குகிறது. குசம் என்பது தருப்பைப்புல். எனவே தருப்பைப்புல் லடர்ந்தகாடு. தருமகருத்தா திரு. பொன்னுசாமி கவுண்டர் பிறப்பிடம்.

**முருங்கைப்பட்டி** வடகிழக்கில் தற்போது முருங்கப்பட்டி என்று வழங்குகிறது. முருங்கை என்பது கிஞ்சுகமரம். கலியாண முருங்கை. பச்சைத் தழையும் சிவந்த பூவும் உடையது. கிளிகள் வசிக்கும் மரம். சித்தர்களுக்கு சிறந்த மூலிகை. இம்மரங்களடர்ந்த காடு. வன்னியகுல மரபினர் அதிகம். சித்தரிடம் பற்றுக் கொண்டவர்கள். திரு. **முத்துசாமிக் கவுண்டர்** இவ்வூர்ப் பெரியார்.

**நல்லணம்பட்டி**. தென்மேற்கில் இவ்வூரைப்பற்றிய ஒரு கர்ன பரம்பரைக் கதை உண்டு. கோயிலுக்கு முன்னால் தினந்தோறும் மாடு மேய்க்கும் சிறுவர்கள் விளையாடுவது வழக்கம். விளையாடும் கூட்டத்தில் தினந்தோறும் ஒரு புதிய சிறுவனும் வந்து விளையாடுவான்.

அவனே எல்லோரையும் ஜயிப்பான். தோற்றவரைத் தலையில் குட்டுவது வழக்கம். இப்படித் தினந்தோறும் குட்டுப்பட்ட சிறுவன் தன் தந்தையிடம் சொன்னான். தந்தை ஒரு சாட்டையுடன் வந்து ஒளிந்திருந்து பார்த்தான். குட்டிய புதிய சிறுவனைத் தந்தை சாட்டையால் அடித்தான். அடிபட்ட சிறுவன் கோயிலில் போய் மறைந்துவிட்டான். அடிபட்டவர் சித்தர். சிலையில் தழும்பு இருக்கிறது. சித்தரை அடித்த பரம்பரையினர் வசிப்பது நல்லணம் பட்டி. ஆண்டுதோறும் இவ்வூர்த் தலைவர் கோயிலில் முடியிறக்கிச் சந்தனக் கட்டையால் அடிக்கப்படுகிறார். சித்தர் அடிபட்டு நல்ல அண்ணன் ஆனவர்.

## 17. மற்றும் சில கதைகள் :

வன்னிய மரபைச் சார்ந்த ஒருவர் மலையில் மாடு மேய்த்து வருவது வழக்கம். தினந்தோறும் ஒரு மாடு மட்டும் தனியாகப் போய்விடும். மாடுகள் திரும்பும் நேரமறிந்து தானே வந்து சேர்ந்துவிடும். அம் மாடு மட்டும் வயிறு நிறைய மேய்ந்து வரும். நிறைய பால் தரும். இதை அறிய ஒருநாள் மேய்த்த சிறுவன் அதன் பின் போனார். அது ஒரு மலைச்சரிவில் சென்றது. அங்கு அழகிய சோலைகள், நீர்ச்சுனை, பல சித்தர்கள் இருந்தனர். இவரை அங்கேயே சில நாள் வைத்திருந்து பின்னர் மலையடிவாரத்தில் கொண்டுவந்து விட்டனர்.

## 18. புலிக்குத்திச்சாமி :

மற்றுமொருவர் மலையடிவாரத்தில் ஒரு புலியைத் துரத்திச் சென்றார். அதன் மேல் வேலால் குத்தினார். புலி சித்தர் கோயிலுக்கு முன்னால் வந்து விழுந்து விட்டது. கோயிலுக்கு முன்னால் புலி வேலால் குத்தப்படும் உருவம் கல்லில் அடிக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற உருவம் தாரமங்கலம் தென்புறம் வீதியில் இருக்கிறது, இஃது ஒரு எல்லையைக் குறிக்கும் குறியாயிருக்கலாம். இது போன்ற பல கிளைக் கதைகள் உண்டு. சித்தர் கரடி

யாக வந்து ஒரு பெண் கலியாணத்தில் சாட்சி சொல்லிய தாக ஒரு கதை உண்டு.

## 19. சித்தர் நூல்கள் :

போகர் எழுதிய நூலில்,

"துரிதமாய்ப் பாட்டர் திருமூலர் பாதம்
துணையாகக் காலாங்கி அய்யர் பாதம்
நிருவிகற்ப சமாதியுற்றோர் பாதம் போற்றி"

எனக் குரு வணக்கம் கூறுகிறார். இதில் திருமூலர் பாட்டன் என்றும் காலாங்கி தந்தை என்றும் வணங்குகிறார்.

காலாங்கி ஞானம் என்ற நூலில்,

"அறிந்துபார் என்பேரை முக்கால் சொல்லி
அக்காலே எண்கால் கொண்டு இருகாலோடி
அறிந்துபார் அங்கிகால் இரண்டுமொன்றாய்
ஆச்சு பாரிருபேரும் என்பேராச்சு
அறிந்துபார் கருவியெலாம் பற்பமாக
ஆச்சுதடா அரைவாசி முக்கால்வாசி
அறிந்துபா ருன்பேரும் என்பேராச்சு
ஆயிரத்தெவ் கமலமதி லிருந்துதானே" 1

"தானென்ற கமலமுனி யானேன்பாரு
சகல சித்தர் மெச்சவு மெய்ச் சித்தனானேன்
மானென்ற வாலைசிறு பெண்ணாள்தேவி
மாசித்தன் என்றெனக்குப் பேருஞ்சொல்லி
தேனென்ற வமுதகலை யூட்டிவைத்து
செகசால வித்தையெலாம் தெரியச்சொல்லி
வானென்ற வெளிகாட்டி வெளியிற்குள்ளே
மனதடங்கிச் செய்யெனவே வழுத்தினாளே." 2

"நாளொன்றுக் கிரவுபகல் இரண்டுவேளை
இரண்டுமொன்றாய்க் கண்டதிரு மூலநாயேன்
தானென்னு மெனையழைத்தார் அழைத்தபோது
தானின்றேன் அவர்க்குநான் பிள்ளையானேன்

கேளென்று முன்பின்னாய் பின்னுமுன்னாய்
கேசரத்திற் போய்மீளச் சூட்சஞ்சொன்னார்
பாளென்ற முப்பாழுக் கப்பாலென்னை
பகரிதாய் நின்றபதி தன்னைத்தானே." 3

"தன்னைத்தா னறிந்தபின்பு பின்னைக்கேளு
தலைவனென்ற மூலகுரு தன்னையாரும்
என்னைப்பார் உன்னைப்பார் என்றுசொல்லி
எதிர்த்துவரு மிடகலையை பிறுத்திப்பாரு
பொன்னைத்தான் தேடிமெத்தப் புதைத்துவைத்து
புத்தியற்ற உலகத்தோர் செத்தாரப்பா
தன்னைத்தா னறியாத உலகத்தோர்கள்
சாத்திரத்தைப் பாராத மடையர்தாமே." 4

இச்செய்யுட்களால் முதல் செய்புளில் கூறப்படும் கால் அங்கி இரண்டுங் கலந்து காலாங்கியானேன் என்றார். அதாவது இடகலை பிங்கலை என்ற இரண்டு நாடிகளையும் சுழிமுனையில் செலுத்தியபோது "காலங்கி" என்ற பெயர் திருமூலரால் வைக்கப்பட்டது. "ஆயிரத்தெண் கமலமதி லிருந்து கமலமுனியானேன் பாரு" என்றதால் சிரசில் சகஸ்ர அறைக்குள் செலுத்திய சமாதி நிலையறிந்த காலத்தில் கமலமுனி என்ற பெயர் வந்ததெனக் கூறுவர். அடுத்த இரண்டு செய்யுட்களிலும் திருமூலநாயனார் பக்கத்தில் இருந்து அவ்வப்போது யோகநெறி விளக்கி ஞானக் கண்கொடுத்து என்னைத்தாளுக்கினார் என விளக்குகிறார்.

காலாங்கி எழுதிய நூல்கள் உபதேச ஞானம் 34. ஞானசூத்திரம் 29. ஞானவிந்து ரகசியம் 30. இந்திர ஜால ஞானம் 46. ஞான பூஜாவிதி 80. எனவும் கமல முனி ஞானசைதன்யம் 18. கமலமுனி ஞானசூத்திரம் 76. முதலிய நூல்கள் அச்சாகியிருக்கின்றன. இந்நூல்களில் காலங்கிநாதர் தமது குரு திருமூலரைத் தெளிவாய்ப் போற்றியிருக்கிறார். நவநாதர் பரமானந்தர் முதலியோர் பாடல் கேட்டதையுங் கூறுகிறார். ஆனால் இங்

நூல்களில் கருங்காட்டுச் சித்தர் என்றோ கஞ்சமலைச் சித்தர் என்றோ எங்கும் வரவில்லை.

எனவே இவரது இயற்பெயர் சுந்தரன் சுரபுர நாதரால் இடப்பட்ட பெயர் கஞ்சமலைச் சித்தர் கருங்காட்டுக் காவலர். திருமூலரால் இடப்பட்ட பெயர்கள் காலாங்கி, கமலமுனி, கஞ்சமலையமான், காலாங்கி கஞ்சமலையன் என்பனவாம். உலக வழக்கில் கஞ்சமலைச் சித்தர் கருங்காட்டுச்சித்தர் என சாதாரணமாய் எல்லோராலும் வழங்கப்படுகிறது.

கஞ்சமலையின் மேல் சித்தர் இருந்த இடம் சித்தர் கோயில் என வழங்கப்படுகிறது. கோயில் ஒன்றும் மலையில் இல்லை. வெட்ட வெளியான இடத்தில் சிறு சிலைகள் சாதாரணமாய் வைக்கப்பட்டிருக்கின்றன. சித்திரை அல்லது வையாசிப் பௌர்ணமியன்று மலைக்குச் சென்று இவ்விடத்தில் பூசை செய்வது வழக்கம். அவ்விடத்திற்குச் சற்றுமுன் கன்னிமார்கோயில் எனஏழு சிலைகள் ஒரு வெளியிடத்தில் இருக்கின்றன. அதற்கடுத்தாப் போல் இருமலைச் சரிவு. அவ்விடத்தைக் கன்னிமாரோடை என வழங்குகின்றனர். மலையின் மேல் கருங்காடு இருக்குமிடம் தெரிவதில்லை. அடர்ந்த மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு விட்டன. ஒரு சிறு பாகத்தில் கொஞ்சம் புதர்கள் இருக்கின்றன. மலையின் கிழக்குக் கோடியில் ஒரு விநாயகர் கோயில் இருக்கிறது. மலையடிவாரம் கிழக்குக் கோடியில் வடபுறத்தில் அழகிய தோட்டங்கள், இம்மலையில் இரும்பும் தங்கமும் இருப்பதாக ஜர்மானியர் முதலிய மேற்றிசை நாட்டினர் பார்த்துச் சொல்லியிருக்கின்றனர். மைக்கா இருப்பதாக கொஞ்சகாலம் வேலை நடந்து பின்னர் நின்று விட்டது. சில பகுதிகள் காட்டிலாகா மேற்பார்வையில் இருக்கின்றன.

## 20. முடிவுரை

கோரக்கர் அலவாய்ச் சித்தர் முதலியோர் நாட்டில் மழையில்லாமல் மக்கள் உணவில்லாமல் வாடிய காலத்

திலே கரபுரநாதரிடம் தவம் செய்து மக்களுக்கு உடல் வலி குன்றாது மூலிகைகளைத் தர வேண்டித் தவம் செய்தனர். கரபுரத்தில் சிவபெருமான் இக்கஞ்சமலையைப் பிரமனால் படைத்துள்ளோம். அம்மலையில் உள்ள கருங்காட்டில் பல மூலிகைகள் உண்டு, எனவருளிச் செய்தனர். இஃது கரபுரநாதர் புராணத்தில் கூறப்படுவது. இதிலிருந்து சித்தர்கள் எக்காலத்திலும் மக்களை நன்னெறியில் நிறுத்தி உயர்ந்த நிலைபேறு அடைய வழிகாட்டுபவர்கள் என்பதும் அவர்கள் செய்துள்ள நூல்களில் சோதிடம், வைத்தியம், இரசாயனம், தேகதத்துவம், பொருளியல்பு முதலியன ஏற்றாருக்கு ஏற்றவாறு உழைப்புக்குத் தக்க வழிகாட்டி விளக்கியிருக்கின்றனர் என்பதும் தெளிவு. இத்துறையில் திருமூலரின் சிறந்த மாணாக்கர் கஞ்சமலைச் சித்தர். அவர் மடங்கண்டு அகோரர் போகதேவர் முதலிய ஐந்து சிறந்த மாணாக்கர்களை உற்பத்தி செய்த இடம் கஞ்சமலை. இக்கஞ்சமலைச் சிறப்பையும் சித்தர் சிறப்பையும் தலவாசிகளும் பக்தர்களும் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது. இத்தகைய அரிய சிறப்பு வாய்ந்த கஞ்சமலைச் சித்தர் சன்னதியில் தமிழின் திறத்தை அடையச் சமரசசன்மார்க்கம் பரவ ஒரு சித்தாந்த மடத்தைக் காணவேண்டுவது தமிழன் கடமை. தமிழ் நெறியறிந்து சித்தாந்த சன்மார்க்கம் நிலையறிய நுட்பமுடன் பரப்ப ஏற்றதாய் ஒரு அழகிய மடம் அமைய வேண்டும். இது பக்தர் கடமை. அதுதான் கஞ்சமலைச் சித்தர் தமது அன்பர்களிடம் எதிர்பார்ப்பது என்பதும் புலனாதல் வேண்டும்.

> "பின்னை நின்றென்னே பிறவி பெறுவது
> முன்னை நன்றாக முயல் தவம் செய்கிலர்
> என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
> தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்பது திருமூலர் வாக்கு. அந்நற்காலத்தை நாடி நிற்போமாக.

## விநாயகர் துதி

### வெண்பா

சீராரும் சித்தர் சிவமயமாய் சேர்ந்தருகன்
பேராரும் பித்தர் பெருமானே—காராரும்
கஞ்சகிரி அத்தன் கதைகூறத் தும்பிமுகன்
தஞ்சம் அவன்தாள் சரண்.

### போற்றிக் கலி வெண்பா

பூவுலகம் போற்றிப் புகழ்பெறவே புண்ணியநற்
பாவுலகம் பைந்தமிழ்தென் ஞடென்போம்—மேவுசிவம்

கோலங்கொள் கொங்கினிலே கஞ்சகிரிக் கோயிலிலே
சீலங்கொள் சித்தர் சிவமயமாய்—பாலனுரு

வாய்வந்தார் வண்ணவடி வேல்முருகன் மூலருடன்
போய்க்கஞ்சர் காடகரும் போதமுற—வாய்ந்தகரு

நெல்லிக் கனிகாட்டும் நேர்மையிலே நின்றகதை
சொல்லித் துலக்கமுடன் தோன்றிடவே—வில்லங்கம்

இல்லை இதையறிவீர் இங்கிருக்கும் நந்தியவர்
சொல்லியநூல் தொல்லுலகில் தோற்றமுடன்-நல்லியலார்

நாடியென நாட்டினர் ஞானமுறத் தேவியுடன்
கூடிச் சிவபெருமான் கூறியது—தேடிவரும்

தெய்வத் திருத்தமிழில் செப்பினன் செம்மலவன்
பெய்யுமழை மாரியினில் பேதைமனம்—பேய்பதற

ஏற்றினன் ஓடத்தில் எம்பெருமான் கண்ணனவன்
ஆற்றினிலே ஓட்டி அழகாகப்—போற்றியநூல்

கோலாகக் கொண்டுகரை ஏறென்று கூறிஒரு
மூலா தாரக்கனலை மூட்டினன்—மேலான

நேராக மோனநிலை நெஞ்சினிலே நிற்கவென
வீரா சனத்தினிலே வீற்றிருக்கும்—தேராத

சித்தம் தெளிவிக்கும் சித்தரிவர் செப்புகின்றேன்
நித்தம் நினைத்திடுவோம் நின்மலமாய்—அத்தனருள்

பித்தம் தெளிவிக்கும் பெம்மான் அடிபோற்றி
தித்திக்கும் தெய்வத் திருமூலர்—சித்திபெற

முத்திக்கு மூலம் முளைத்த முதல்போற்றி
வந்துதித்த வண்ண வடிவேலன்—அந்தமுடன்

கந்தங் கரபுரமாய் கஞ்சமலை வந்தமுனி
சுந்தரராய்த் தோன்றித் துணைபோற்றி—வந்தவினை

நீக்கும் கருநெல்லி நேரான மூலிகையும்
ஆக்கை அழிந்தால் அதுபொருத்திக்—காக்குமுயிர்

சாக்காடு நீக்கும் சஞ்சீவி தான்பலவாய்
காக்குங் கருங்காட்டு சித்தரவர்—வாக்குமனம்

காலங்கி நாதன் கழல்போற்றிக் காவலுற
நாலந்த வேதம் நலந்தழைக்க—பாலனுரு

வாலந்தம் ஆதியிது வாகும் மலைபோற்றி
சீலங்கொள் செல்வத் திருமூலர்—வாலவய

தாகித் திருவா வடுதுறையில் சார்ந்துசிவ
யோகி உரைத்திரு மந்திரத்தில்—ஆகியவர்

“வித்தக மாகிய வேடத்தர் உண்டஊண்
அத்தன் அயன்மால் அருந்திய”—புத்தமுதாய்

“சித்தந் தெளிந்தவர் சேடம் புசித்திடவே
முத்தியாம் மூலன்” மொழிந்ததென—இத்தரையில்

செப்பியதும் தேவனைத் தேர்ந்து தெளிந்தோமால்
தப்பிதங்கள் நீக்கும் தயாபரனே—அப்பனுமாய்

அம்மையுமாய் ஆதரிக்கும் அண்ணல் அடிபோற்றி
இம்மைப் பிறப்பறுக்கும் ஈசனவன்—எம்மதமும்

சம்மதமாய் சாற்றும் சரவணனும் சன்மார்க்கச்
செம்பொருளாய் சேர்ந்தசிவ நாரணனும்—சிம்மமென

தும்பை துளவம் துலக்கமுறத் தூயநிறம்
வெம்மையுடன் தண்மை விளக்கமுற—தம்பியுடன்

தும்பிமுகன் தோற்றம் துகளறுக்க மூலத்தில்
அம்பிகையின் அன்பில் அகந்தழைக்க—நம்முருகன்

ஞானகுரு வாயிருக்க நான்நீநாம் நாடுவதும்
மோனநிலை மூன்றொன்றாய் முன்னிரண்டு—தானழிய

உள்ளும் புறமுமாய் உள்ளபொருள் ஒன்றாகும்
கள்ளங் கலங்கும் கருநெல்லி—கொள்என்றான்

அள்ளிக் கொடுக்கும் அதியமான் அவ்வைக்கு
தள்ளித் தடுத்தவளும் தம்பியிது—விள்ளுவன்கேள்

துள்ளி விளையாடும் தோற்றமது தொல்லைதரும்
உள்ளங் கலங்கும் உடலிளமை—கொள்ளுவதால்

சொல்லுவன்கேள் தூய கருநெல்லி தோன்றுமிடம்
வல்ல திருமூலர் வைத்தவிடம்—நல்லதமிழ்

நாட்டின் நலந்தழைக்க கொங்கிற் குணம்பெருக
காட்டினார் கஞ்சகிரி காதலுடன்—ஊட்டுவான்

கந்தன் கருநெல்லி காண்போம்வா என்றெழுந்தாள்
மாந்தர் மயக்கம் அதுகருமை—வேந்தேகேள்

சாலத் தவிடுமியில் நீங்கியநெல் சாற்றுகிறார்
மூலர் முளைதவிடில் மூடும்உமி—போலவென

முக்குற்றம் மூடிக் கருவாகும் மூலத்தில்
அக்குற்றம் போக்கும் அரிசிஅது—பக்குவமாம்

தக்கன் தடுத்த சிகரமது தானறிவில்
துக்கம் தொலைக்கும் அரிமுன்னே—மிக்கபொருள்

மேன்மை விளக்கமுடன் மேதினியே விண்டுவென
ஊன்றும் ஒளியால் உயிர்சிவமாய்—தோன்றிடவே

மூன்றெழுத்து மந்திரமாய் மூன்றில் இரண்டுபொருள்
ஆன்றோர் அளித்த அரிசிவமே—ஒன்றேயாம்

நெல்லில் இதையறிவீர் நீக்கக் கருவில்லை
அல்லல் அறுத்து ஆனந்தம்—நில்லுமென

சத்திசிவ மாயெங்கும் தந்தகனி கந்தனவன்
சித்தமதில் சேரத் திரைநரையும்—தீர்த்துவிடும்

சித்திமதைச் சீராக்கச் சித்தரெனப் பேர்கொண்டார்
அத்தனென அன்றுரைத்தாள் அவ்வையுமே-இத்தரையில்

ஒன்று பொருள் வாவென் றுறுதியுடன் சித்தர்மலை
சென்றாள் சிறுவனுடன் செந்தமிழில்—நின்றுதுதி

செப்புகின்றாள் தெய்வத் திருவருளில் போற்றி என
அப்பனே போற்றி அடியார்கள்—தப்பிதத்தைப்

போக்கும் புனிதனே போற்றிப் புகழ்பரவக்
காக்குங் கருணைக் கடல்போற்றி—வாக்கினிலே

வாய்மை வளர்க்கும் வளம்போற்றி வண்ணமுடன்
மாய்கை மறைக்கும் மலர்போற்றி—தூய்மைதரும்

வேல்போற்றி வில்லெடுத்த கைபோற்றி சித்தர்நூல்
கோல்கொடுத்த கொண்டல் குணம்போற்றி-மால்மருகன்

தாள்போற்றித் தந்தையெனும் கஞ்ச கிரிபோற்றி
கோள்காட்டும் கோழிக் கொடிபோற்றி—நாள்நலிய

நாதாந்தம் நாட்டும் நலம்போற்றி நான்கு நிலை
வேந்தாத வித்தகனு மம்போற்றிப்—போதாந்தப்

புண்ணியனே போற்றியெனை ஆட்கொண்ட பூமடந்தை
தண்ணருளில் தாயாகி நாமடந்தை—எண்ணமதில்

திண்ணமுறச் செய்ததிருக் கண்ணன் கழல்போற்றி
விண்ணோர் வினைதீர்க்கும் வேலனவன்—கண்முன்னே

கண்ட திருநடனக் காட்சியிலே போற்றினேன்
அண்டத்துக் கப்பாலும் அப்பாலாய்—கொண்டதிருக்

கோலமீது போற்றுகின்றேன் கூவும் மயிலினிலே
வாலவயதாகவந்து நின்று—பாலகனைப்

ஓமென்னும் உண்மை உரைத்த சரவணனே
ஓமென்று போற்றினேன் ஓம்சக்தி—ஓமென்று
உள்ளத்தில் உண்மை உறுதிபெற உன்னருளால்
வெள்ளப் பெருக்காய் விளக்கமுற—தெள்ளுதமிழ்
கொள்ளக் கொடுப்பாய் குணம்.

## மங்கள வாழ்த்து

மங்கல தினத்தில் இங்கு மங்கலங்கள் கூறி அன்னை
மங்கைபரா சக்தி உள்ளம் தங்கவே
சங்கரன்ம கனும்வந்து சஞ்சலங்கள் ஓட்டி உள்ளம்
தங்கிநின்று வாழிதமிழ் கூறவே
கங்குலும்பகலும் எங்கும் கஞ்சகிரி நாதன்பரம்
பொருள் எனச் சங்கநாதம் காட்டவே
பொங்குக புகழும்நின்று புண்ணியநற்போதம்வர
மங்களம் மங்களம் என்று பாடுவோம்.

திங்களுங் கங்கையணிந்த தேவன் மங்கைபராசக்தி
தும்பிமுகன் வேலனுடன் கூடியே
துங்கமலர் மங்கையுடன் வாணியுந் துணைபுரிய
தோன்றுந் தூயநாரணன்க திருடன்
அங்கமதில் அஞ்சடக்கி ஆறுமுகம் அஞ்சுமூர்த்தி
ஆனபொருள் மங்கலத்தில் அன்புடன்
தங்குமனம் தன்னில் அருள்தயாபரம் ஆனமூலன்
சயசய சயசய மங்களம்.

# வேண்டுகோள்

இஃது கஞ்சமலைச் சித்தரின் முதல் நூல். சித்தரின் அருளால் கிடைத்த நந்தி நூலின் தன்மையிலே செய்யுள், சிந்து, கதை ரூபமாக பல புத்தகங்கள் வெளியிடல்வேண்டும். இம்முயற்சியில், ஒவ்வொரு அமாவாசையிலும் ஒரு சிறு புத்தகமாக ஒரு வருடத்தில் பனிரண்டு மலர்கள் வெளிவரும். இத் தலத்தோடு தொடர்புள்ள தாரமங்கலம் கைலாசநாதர் கோயில் வரலாறு எழுதி முடிந்திருக்கிறது. கூடிய சீக்கிரம் வெளிவரும். காடையாம் பேட்டையில் அழிந்துபோன கடேஸ்பரர் கோயில் வரலாறு பெருமாள் வரலாறு, முதலியவற்றை அழகாக வெளியிடப்படும்.

இத் துறையில் சித்தர் விளக்கத் தமிழ் நூல்கள் பரவ பக்தர்கள் ஆதரிக்கவேணுமாய்ப் பணிவுடன் கோருகின்றேன்.

ஆசிரியன்

ஓம் நமோ நமசிவாய

RAS-90

ராம ஹரே

ராம ராம

ராம ராம

ஹரே ராம



ஓம் நமோ நாராயணாய